தென்மொழி

இதுவா, செயவேண்டிய சீர்திருத்தம்?

ஊருண்ணக் கொடுக்கின்ற உழவர்க்கிந் நாட்டில்
உருப்படியாய் ஒருநலனும் செய்யவந்தார் இல்லை!
போருண்ணும் மாடுகள்போல் ஒருபுறத்தில் செல்வர்
புடைக்கவயி றுண்ணுகின்றார்! மறுபுறத்தில் சோற்று
நீருண்ணும் வாய்ப்புமின்றி நெடும்பசியால் மாளும்
நிலையின்னும் மாறவில்லை பலகோடிப் பேர்க்கு!
சீரெண்ணித் திருத்தவந்தார் எழுத்துகளை இங்கே!
செயவேண்டும் சீர்திருத்தம் எதுவென்று காணார்!


மொழி-இனம்-நாடு

தொத்துபிணி யெனுஞ்சாதி இனுந்தொலைய வில்லை;
தொல்லைமதக் கேடுகளும் வளர்ந்துவரும் நாட்டில்!
செத்துசெத்துப் பிழைக்கின்றார் ஏழையரிம் மண்ணில்;
சிறுகுடிலும் வாய்க்காமல் தெருக்களில்வாழ் கின்றார்.
ஒத்துவராக் கொள்கையினால் உழைப்பாளர் கூட்டம்
ஓயாத தொல்லைகளால் நலிகின்றார்! இன்னும்
எத்தனையோ சீர்திருத்தம் இங்கிருக்கப் பண்டை.
எழுத்துகளைத் திருத்தவந்தார், எளிமையது வென்றே!

சுவடி: 15.
ஓலை: 6.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை.
1. உருபா.

நமக்கு வந்த மடல்கள்.

(இம்மடற் பகுதிக்கு எழுதுபவர்கள், தங்கள் கருத்துகளை நீண்ட கட்டுரையாக எழுதாமல் மிகமிகச் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.)

0:612: அன்பு கெழீஇய ஐயா அவர்களுக்கு வெற்றி வேந்தன் வணக்கத்துடன் எழுதும் மடல். நலமே விளைய ஆவல். சு. 15 ஓ 4 இதழில் இந்தியெதிர்ப்புக் கொள்கை மாநாடு பற்றித் தங்கள் கருத்துகளைச் செவ்விய வண்ணம் விளக்கியிருந்தீர்கள். திராவிடர் கழகத்தார் பகுத்தறிவு-மூட நம்பிக்கை ஒழிப்புப் பற்றியெல்லாம் பேசுகிறார்களே தவிர, தமிழகத்தில் ஆரிய இனத்தின் அடிவேரைப் பிளக்க எள்ளளவும் முயற்சி செய்யவில்லை. ஆரியக் கடவுள்களைத் தள்ளுவதுபோல, ஆரியப் புராணங்களின் கதையை வெறுப்பது போலத்-தமிழில் ஆரிய எழுத்துகள் கலவாமல், மொழியும் கலக்காமல் எழுதினால் என்னவென்று வினவும்போது அவர்கள் அளித்த விடை எமக்கு வியப்பையே தந்தது. "மக்களுக்குப் புரியாது. நம் கொள்கைகள் எளிதில் பரவா." என்று இவர்கள் கற்பிதக் கற்பனையைச் சொல்கிறார்கள். இவர்களாகவே தப்பித் தவறி இதில் "சறுக்கி விழாமல்" காப்பாற்றிக் கொள்ள விரும்புகிறார்கள். தமிழினத்தின் ஒட்டு மொத்தமான இனப்பற்றும், மொழிப்பற்றும் இல்லாதபோது தமிழகத்தைக் காப்பது எப்படி? அது மட்டுமின்றிப் பொதுவாக ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுதுவதில் அதிக நாட்டம் காட்டுகின்றனர். **"வாக்அவுட்"** என்றும் **"பார்லிமெண்ட்"** என்றும் பலவாறு எழுதுகின்றனர். இவர்கள் செய்யும் எழுத்துப் புரட்சியும் ஆண்டு மாதம் நாள் கிழமைப் புரட்சியும் போல தமிழ்ச் சொற்கள் மக்களுக்கு புரியாவா? இது அவர்களின் சோம்பேறித் தனத்தையும் அறியாமையும் கையாலாகாத் தனத்தையும் தான் காட்டுகிறது.

—**சி. வெற்றிவேந்தன்**. கரைமேடு, பாகூர். (புதுவை)

0:613: அன்பு சான்ற அய்யா, வணக்கம். பெரியாரின் பணி பற்றி (தெ. மொ. 15; ஓலை 4)ச் சிறப்பாகக் கூறியிருக்கிறீர்கள். ஆனால் பெரியாரின் பெயரில் பெருவிழாக் கொண்டாடும் இன்றையத் தமிழ் நாட்டரசை நினைத்தால்தான் அச்சமாக இருக்கிறது. ஒருபுறம் பார்ப்பனர்களுக்கு ஏற்றம் கொடுப்பதையே பிறவி நோக்கமாகக் கொண்டவர் போன்று நடந்து விட்டு இதை மறைக்கும் திரையாகப் பெரியார் நூற்றாண்டு விழாவைப் பயன்படுத்துகிறார்கள். அயல்மொழி நூற்களைத் தமிழிலும், தமிழ் நூற்களை அயல் மொழியிலும் பெயர்க்கும் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் கூட அனைவரும் பார்ப்பனரே. பாவாணரின் செ. சொ. பி. அகரமுதலிக்கு ஒரு தம்பிடி கூடக் கொடுக்க முன்வராத இவ்வரசு மொழிக்கு உண்மையில் கடுகத்துணை பயனும் இல்லாத எழுத்துச் சீர்த்திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதாகக் கூறித் தம் தமிழ்ப் பகையை மறைக்கப் பார்க்கிறது. தன் அதிகாரத்திலிருக்கும் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் காணப்படும் ஆங்கிலத்தைத் தமிழாக மாற்றுவதில்கூட இவ்வாட்சிக்கு மனமில்லை.

—**செ. கரிகாலன்**. மதுரை.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதல்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!

சுவடி: 15 ஓலை. 6.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

நளி சிலை தி. பி. உ௰௯கூ-

திசம்பர்-1978.- சனவரி'79.

தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**

ஆசிரியர் **மா. பூங்குன்றன்.** அறி.இ. க.மு.

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)

தென்மொழிமறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)

கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)

தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்,

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

பெரியார் சீர்திருத்தம் என்னும் பெயரில், தமிழ்தான் திறந்த மடமா?

சென்ற இதழ் ஆசிரியவுரையில், தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி நாம் தெளிவான மறுப்பை வெளிப்படுத்தியிருந்ததை அறிந்த பலரும் பலவாறு நம்மை எதிர்த்திருக்கின்றனர். ஆதரவு எதிர்ப்பு என்பவற்றைப்பற்றி நாம் என்றும் கவலைப்பட்டதில்லை. அதேபோல் அறிவியலுக்குப் பொருந்தாத எதையும் நாம் ஏற்றுக் கொண்டதும் இல்லை. வாழ்க்கையின் எந்தக் கூறுயினும் அஃது அறிவியலுக்குப் பொருந்துகிறதா இல்லையா என்று பார்ப்போமே யொழிய, அது பழைமையா புதுமையா என்று புதுப்பகுத்தறிவுக் கண்கொண்டு பார்க்க மாட்டோம். பழைமையில் எத்தனையோ தங்கங்களும் புதுமையில் எத்தனையோ பித்தளைகளும் உள்ளன

என்பதை நடுநிலைக் கண் கொண்டு பார்க்கும் எவரும் ஒப்புவர். மற்றபடி பழைமை முழுதும் தீண்டத் தகாததும் ஆகாது; புதுமை முழுதும் விழுங்கத் தக்கதும் ஆகிவிடாது. ஆனால் பகுத்தறிவு என்று கூறிக்கொண்டு, பழைமை எல்லாமும் அறிவியலுக்கும் வாழ்வியலுக்கும் பொருந்தாதன என்று இழிப்பதும், புதுமை முழுதுமே அவற்றிற்குப் பொருந்தி வருவன என்று போற்றுவதும் போன்ற **முழு மூட நம்பிக்கை** வேறு இருத்தல் முடியாது. இன்று நம் அறிவியலுக்கும் வாழ்வியலுக்கும் பயன்படும் கல்வி, உணவு, உறையுள் முதலிய எத்தனைத் துறைகளை எடுத்துக் கொண்டாலும், அவற்றுள் பயன்படுத்தப் பெறும் பொருள்களுள் 80 விழுக்காட்டுப் பொருள்கள் தொன்று தொட்டு வரும் பழைய மரபையும் கண்டுபிடிப்புகளையும் அடியொட்டியனவே. நாமே பழைய மரபால் வந்தவர்கள் தாம். வெறும் ஆரவார அறிவு மயக்கத்தால் பழைமை முற்றுமே அடியோடு தவறு என்பதும், எல்லா நிலைகளிலும் புதுமையே தேவை என்பதும் மதிமயக்கமே யன்றி அறிவியல் தெளிவு ஆகாது. இத்தகைய உணர்வு விரைந்து நம்மை அழிவு நிலைக்கே கொண்டு செல்வதாகும். நாம் உண்ணுகின்ற உணவுப் பொருள்கள், உடுக்கின்ற உடைப்பொருள்கள் வாழப் பயன்படும் வாழ்வியல் பொருள்கள் யாவற்றையும் ஒருமுறை பொறுமையாகப் பட்டியல் போட்டு, அவற்றுள் உள்ள பழைமை, புதுமைப் பொருள்களைப் பாகுபாடு பண்ணிப் பார்த்தால், நாம் சொல்லுகின்ற உண்மை விளங்கும். பழைமை அனைத்துமே தவறு என்றால் இன்று பகுத்தறிவுக்காரர்கள் என்று கூறிக்கொள்ளும் இவர்கள் பெருமையாகக் கொண்டாடப் பெறும் பெரியாரும் பழைமையானவர் தாமே! எதற்காக அவரைக் கொண்டாடுதல் வேண்டும். எனவே அறிவுள்ள பழைமை ஏற்கத் தக்கதேபோல், அறிவற்ற புதுமையும் தள்ளத் தக்கதே என்று அறிதல் வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதானால் நாம், இன்று எழுதும் பழைமையான எழுத்துகளில் கூட இவர்கள் புதுமையாகச் செய்வதாகக் கூறும் சீர்திருத்தம் மிகமிகச் சிறிய அளவுடையதே! இருந்தும் அதனை ஏன் ஒப்புக் கொள்ளக் கூடாது எனில், அந்நிலை ஏற்கனவே இருந்து திருந்திய நிலை என்பதால்தான். விளக்கமாகச் சொல்வதானால் முன்னே இருந்தவர்கள் இப்பொழுது சீர்திருத்தியிருக்கும் இந்நிலை, வழக்குக்குப் பொருந்தா நிலை என்று கழித்துக் கட்டிய நிலையே. இதைத்தான் நாம் இன்று சீர்திருத்தம் என்னும் பெயரால்-அறிவியல் மூளையால்-மயங்கி அழைக்கின்றோம். எனவே இது **வளர்ச்சி**யாகாது. **தளர்ச்சி**யே ஆகும். **உயர்வு** ஆகாது **இழிவே** ஆகும்.

மேலும் பெரியார் பெயரால் கொண்டு வரப்பெறுவதாக இச்சீர் திருத்தத்தைக் கருதுவதால், இதனை எதிர்க்கையில் பெரியாரையே நாம் எதிர்ப்பதாக அன்பர்கள் சிலர் கருதிக் கருத்துப் பரப்ப

முற்பட்டுள்ளார்கள். பெரியாரை நம்மை விட எவரும் அறிவு நிலையில் வைத்துப் பாராட்டியதில்லை. அதேபோல் அவர் கருத்து களில் அறிவியலுக்குப் பொருந்தாதவற்றை அவர் முன்னிலையிலேயே நம்மைவிட எவரும் வெகுவாகக் கண்டித்து நாம் பார்த்ததில்லை. இவற்றுக்கெல்லாம் சான்றுகள் உண்டு. அவர் சொல்லிய அனைத்தும் சரி என்று ஒப்புக்கொள்வதற்கும், பார்ப்பனர்கள் வேத புராணங் களில் கூறப்பெற்ற கருத்துகள் அனைத்தும் சரி என்று ஒப்புக் கொள்வதற்கும் வேறுபாடு இருப்பதாக நாம் கருதவில்லை. பிராமணர்கள் இரமணரையும், காஞ்சிக் காமகோடியாரையும், திராவிடக் கழகத்தவர் பெரியாரையும் கண்களை மூடிக்கொண்டாடும் நிலைகளை மூடநம்பிக்கை என்ற நிலையிலேயே நாம் மதிக்கின்றோம். **ஒருவரைப்** பின்பற்றுவது வேறு; **ஒருவர் அறிவைப்** பின் பற்றுவது வேறு. நாம் பெரியாரின் அறிவை அல்லது தொண் டுணர்வைப் பாராட்டிப் பின்பற்றுகிறோம். அவர் அறியாமையை நாம் தவிர்க்கிறோம். ஒருவர்க்கு எல்லாவகை அறிவும் நிறைந் துள்ளது என்று கண்டுபிடித்துக் கூறுவதற்குரிய எந்தச் சான்றும் மக்களிடத்தில் இல்லை. எனவே அவரவர் அறிவுக்குப் பட்டதையே அறிவு என்று ஒப்புக் கொள்ள முடிகிற மாந்தர்கள் உள்ள உலகம் இது. அதனால் அறிவு எப்பொழுதும் ஆய்வுக்குரியதாகத்தான் இருக்க முடியும். ஒருவர் சொல்வதெல்லாம் அப்படியே அறிவு என்று ஏற்றுக் கொள்ள முடியாது. அதனை ஆய்வுக்குட்படுத்தி மெய்ப் பொருள் காண வேண்டும்.

இனி, பெரியார் தமிழினத்திற்காகச் செய்ய விரும்பிய சீர்திருத் தங்கள் ஏராளம். சாதியொழிப்பு, மத ஒழிப்பு, கடவுள் ஒழிப்பு, கோயில் ஒழிப்பு, வேத, புராண, இதிகாச ஒழிப்பு, கைம்மை ஒழிப்பு, திருமண ஒழிப்பு, இராட்டை ஒழிப்பு, கைந்நூலாடை (கதர்) ஒழிப்பு, மதுவிலக்கு ஒழிப்பு, இந்தியொழிப்பு முதலியன. இனி, தமிழ் நாட்டிற்கு என, தமிழக விடுதலைக் கருத்தையே மிகவும் உயிர் மூச்சாக வலியுறுத்தினர். அவற்றையெல்லாம் செய்ய விரும்பாத— செய்யத் துணிவில்லாத அரசு தமிழ்மொழியில் அவர் கூறியதாகக் கொள்ளும் (உண்மையில் இச்சீர்திருத்தம் அவருடையதன்று; முன்பே இருந்தது என்பதை முன்னரே சுட்டியுள்ளோம்.) இவ்வெழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவது கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது போன்ற இழிவான செயலேயாகும். இன்னும் கோழைத்தனமும் அறிவில்லாத செயலும் ஆகும்.

தமிழ்மொழியைப் பற்றி அக்கறையற்ற இனக்கோடரிகள் பலர் இங்கு உளர். காட்டிக் கொடுக்கும் கயமை உருவர்கள் பல்லாயிரக் கணக்கில் இங்கு உண்டு. ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கேடுகளைப் பேசிக் கொண்டே அவரின் வடமொழியாகிய சமசுக் கிருதத்தை மட்டும் ஆசையோடும் அறியாமையோடும் தழுவிக் கொள்ளத் துடிக்கும் பகுத்தறிவு வாய்ந்ததாகக் கூறிக்கொள்ளும்

பச்சை அறிவிலிகள் பலர் இங்கு உளர். உலகில் உள்ள அனைத்து இனங்களும் தங்கள் தாய்மொழிகளைக் கண்ணும் கருத்துமாகக் கவலையுடன் பேணுகையில் தமிழ்த்தாயைப் பிற மொழிக் கணவர்களுக்கு வைப்பாட்டியாக்கி மகிழும் ஊர் மாறிகள் பலர் உலாவரும் மண் மண்டிலம் இது. எனவே தமிழ்தான் இங்குத் திறந்த மடம். இந்த மடத்தில் எவர் வேண்டுமானாலும் புகலாம். கருத்தறிவிக்கலாம். குட்டை குழப்பலாம். கேட்பதற்கு எவருமில்லை என்ற துணிச்சல் இவர்களுக்கு மிகுதி. எனவே பெரியார் செய்ய விரும்பிய அத்தனைச் சீர்திருத்தங்களையும் அடியில் போட்டு மிதித்து விட்டுத் தமிழில் கைவைக்கத் துணிகிறது இக்குருட்டு அரசு! இதையும் ஏற்றுக் கொண்டு கட்டியங்கூற தெ.பொ.மீ. போன்ற ஆரிய அடிமைகளையும், சுப்பு (இரெட்டியார்) போலும் தமிழ்த்திரிபுத் தாய்மொழியாளர்களையும், அ, ச. ஞானசம்பந்தம் போலும் தமிழ் மானம் குறைந்தவர்களையும் முன்னிருத்திக் கொண்டிருக்கின்றனர் இம் மூதறிவாளர்கள்! இன்னும் மண்டை வீங்கிக் கொண்டல்களோ, பெரியாரை மொழியியல் பேரறிஞராக்கி மகிழ்ந்து கொண்டாடுகின்றனர். பெரியாரை மொழியியல் பேரறிஞராகக் கருதுவது (விடுதலையில் கொ. சு. மகாதேவன் எழுதிய **'மொழியியல் பேரறிஞர் பெரியார்'** என்னும் கட்டுரை பார்க்க.) அவரையே இழிவுபடுத்துவதும், மொழிஞாயிறு பாவாணரின் மொழியியல் பேரறிவை எள்ளி நகைப்பதும் ஆகிய மூடச் செயல்களாகும். அத்தகையவர்களை நடுநிலையாளர்கள் என்று கொள்ள முடியாது. பெரியார் மொழியியல் அறிஞர் என்பதை அவரே ஒப்புக்கொண்டதில்லை. மேலும் தமிழ்மொழியை 'ஒரு காட்டு விலங்காண்டி மொழி' என்று கூறியவரையும், தமிழ் ஒரு Nuisance. தமிழ்ப் புலவர்கள் குமுகாயப் பகைவர்கள் என்று கூறியவரையும் ஒரு மொழியியல் பேரறிஞர் என்று கூறுவது புரட்டர்களின் பொருத்தமில்லாத கூற்றுரும் எந்த மொழியியல் பேரறிஞரும் அவர் தாய்மொழியை இழித்துக் கூறமாட்டார். ஒரு மொழி மேல் விருப்பம் கொள்ளாத ஒருவர் அந்த மொழியை ஆராயவும் விரும்பமாட்டார்; மொழியை ஆராயாத ஒருவர் மொழியியல் பேரறிஞராகவும் ஆக முடியாது. (Philologist-மொழியியல் அறிஞர். Philo-என்னும் சொல் மொழி கற்பதில் மிகுந்த ஆர்வம் என்னும் பொருள்தரும் கிரேக்கச் சொல்லாகும். எனவே Philologist என்பதற்கு மொழி கற்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவர் என்பது பொருளாகும்.)

இனி, அரசு கொண்டு வரவிருக்கும் இவ்வெழுத்துச் சீர்திருத்தம் எத்துணைக் குழப்பம் சான்றது என்பது பற்றியும், இஃது அறிவு நிலைக்கு எங்ஙன் பொருந்துமாறில்லை என்பது பற்றியும், முன்னிதழில் கூறியதற்கு மேல் சற்று விளக்கமாக இவ்விதழில் இன்னும் சில கருத்துகளை ஈண்டு எடுத்துக் காட்டுவோம்.

அரசு இக்கால் அறிமுகப் படுத்தியுள்ள எழுத்துத் திருத்தத்தில் **நால்வகைக்** கூறுகள் உண்டு.

1. இரண்டு உயிர் எழுத்துகள் (ஐ, ஔ) நீக்கம். அவற்றுக்கு மாருக **அய், அவ்** என்று எழுதச்செய்தல்.

2. மூன்று ஆகார உயிர்மெய்யெழுத்துகளில் உள்ள **ணா, றா, னா** வடிவங்களுக்கு ஏற்கனவே வழங்கி வரும் ஆகாரக் குறியீடாகிய **ா**-ஐப் பயன்படுத்துவது.

3. நான்கு ஐகார உயிர்மெய் யெழுத்துகளாகிய **ணை, னை, லை, ளை** ஆகியவற்றிலுள்ள ஐகாரக்குறியீட்டிற்கு ஏற்கனவே உள்ள ஐகாரக் குறியை (ை)ப் பயன்படுத்துவது. (லை-லை; ளை-ளை; ணை-ணை; னை-னை)

4. ஒகர, ஓகார உயிர்மெய்யெழுத்துகள் ஆறுக்கு (ணொ, ணோ, றொ, றோ, னொ, னோ) உள்ள கீழ் விலங்குக் குறியை நீக்கி, எகர ஏகார உயிர்மெய்யெழுத்துடன் ஆகாரக் கால் போடுவது.

இனி, இவற்றைப் பற்றிய நம் மறுப்புகளும் விளக்க கருத்துகளும் வருமாறு:

1. ஐ என்பது தனி ஒலி. அதனுடைய ஒலி 'அய்' என்னும் ஒலிக்குச் சமமாகாது. அதன் உண்மையான ஒலிப்பு 'ய்' போன்றதே (மெய் 'ய்'-ஐ ஒலிக்க முடியாது. உயிர் ஐயை ஒலிக்க முடியும்.)

ஐகாரமின்றிக் **கை** என்னும் எழுத்தை எழுத முடியாது. **ஐ** யின்றி '**அய்**'யைக் கொண்டு **கை**யை எழுத வேண்டுமானுல் 'கய்' என்றுதான் எழுதமுடியும். இப்படி எழுத எழுத்துச் சீர்திருத்தம் ஒப்புகிறதா? அல்லது எழுதாமல் தடுக்க இத்திருத்தம் தடையிடு கிறதா? இதை நன்ருக விளங்கிக் கொண்டால், இதிலுள்ள குழப்பம் நன்கு புரியும். இனி, மாத்திரைக் குறைவால் வேறு செய்யுளில் பல குளறுபடிகள் நேரும்.

மேலும் ஐ என்னும் ஓர் எழுத்து நீக்கப்படுமானுல் அதன் மேற் குறியான 'ை' ஐகாரம் எங்கு வந்தது. **ஐ** இல்லையானுல் '**ை**' ஐகாரக் குறியீட்டுக்கு மூலம் போய் விடும்.

க்+ஐ என்னும் புணர்ப்பின் போது கை என்றுதானே வரும். க்+அய் என்று வரின் 'கய்' என்று தானே வரும். மறுப்படி **கை** என்று எழுதச் சொல்வது எப்படி? **கை**யைக் **கய்** என்று எழுதலாம் என்ருல், **பை**யைப் **பய்** என்றும், **வை**யை **வய்** என்றும் எழுதலாம் தானே. அப்படியானுல் அதன் வேறு வடிவான **பொய், மெய், செய்** என்பதை ஏன் **பொஅய், மெஅய், செஅய்** என்று எழுதக் கூடாது. அவ்வாருயின் **பொஅய்** என்பதைப் **பொய்** என்று எப்படிப் படிப்பது? இதைப் போலும் ஒரு குழப்பம் இருக்க முடியுமா? இதுதலைவலி போய்த் திருகுவலி வரவில்லை, தலைவலியும் இருக்கும்; திருகுவலியும் இருக்கும் என்ற நிலைக்குத்தானே கொண்டு போய் விடும். அதே போல் **ஔ** என்னும் ஒலியும் '**அவ்**' என்பதை

யொத்த ஒலியன்று, ஒளவை என்பதை **'அவ் அய்'** என்று கூட்டி ஒலித்துக் காட்ட முடியாது. ஒலியியல் புணர்ச்சி முறைப்படி **'அவ் அய்'** என்பது **'அவய்'** என்று ஒலிக்கப்படுமே தவிர **'ஔவை'** என்று ஒலிக்கப்படாது.

இனி, **ஔவையை அவ்வை** என்றும், **ஐவனத்தை அய்வனம்** என்றும் எழுதலாம் என்பது செய்யுளில் வகரமெய் யகர மெய் எதுகை நோக்கியே கூறப்பட்டதேயன்றி, உரைநடைக்குப் பொருந்தாது. உரைநடைக்கும் பொருந்தும் என்று கூறுவது, செய்யுள் கட்டுக் கோப்பையும், உரைநடை யிலக்கணத்தையும் உடைத்தெறியத் துணியும் ஒரு முடச் செயலேயாகும்.

2. இனி இரண்டாவது நான்காவது திருத்தங்கள், எழுத்து களைக் குறைப்பதற்காகவோ, நேரத்தைக் குறைப்பதற்காகவோ, இடத்தை மிச்சப் படுத்துவதற்காகவோ கொண்டு வரப்பெறும் திருத்தம் என்பது முழுப்பொய்யும் புனை சுருட்டும் பிழையும், ஆகும். இத்திருத்தம் முன்னுள்ள சுருக்கத்தை விரிக்க முற்படுவதே ஆகும். எடுத்துக்காட்டாக,

ணா, றா, னா என்பவை **ணா, றா, னா.** என்று விரிகின்றன. மூன்றெழுத்து ஆறு எழுத்துகளாக நீளுகின்றன. இத்திருத்தத்தால் நேரமும் இடமும் இரண்டு மடங்கு தேவை என்பதைக் குழந்தை களும் ஒப்புமே!

இனி, **ணை, னை, லை, ளை** ஆகியவற்றை **ணை, னை, லை, ளை,** என்று எழுதுவதால் இடமும் நேரமும் மிக நீளும் என்பதை இவர்கள் அறியாமற் போனது என்ன?

ஒரு குறியீட்டு ஒரெழுத்தை இரண்டு குறியீட்டு ஒரெழுத்தாகச் செய்கின்றவழி முன்பிருந்த 8 எழுத்துகள் 16 ஆகவும், 6 எழுத்து களில் உள்ள 12 குறியீடுகள் 18 ஆகவும் வளர்ந்துள்ளனவேயன்றி இச்சீர்திருத்தத்தால் வேறு விளைவு ஏது? இதனால் 15 எழுத்துகளின் 22 குறியீடுகள் கையால் எழுதுவதானாலும் அச்சிடுவதானாலும் 36 குறியீடுகளாக நீளுகின்றன. அஃதாவது 63.5% (விழுக்காடு) கூடுதலான எழுத்து வேலையாகும் இது. இந்தக் கருத்தை இல்லை யென்று எவராவது மறுக்க முடியுமா?

3. அடுத்து, கால் 'ா' எழுத்தைப் புதிதாகச் சில எழுத்து களுக்கு இட்டு எழுதும்போது 3 குறியீடுகளுக்கு 6 குறியீடுகள் போட வேண்டியிருக்கும். இதனாலும் எழுத்துகளும் இடமும் நேரமும் மும்மடங்காகும். இந்நிலை எழுதுபவர்களுக்கும் அச்சிடுவோர்க்கும் தொல்லை தரும்.

4. இனி, தட்டச்சுப் பொறியில் இச்சீர்திருத்தத்தால் சில எழுத்துகள் நீங்கும் என்பது ஓரளவு உண்மையேயானாலும் நடை

முறையில் கையெழுத்தாளர்க்கு உள்ள கால நீட்சியும் இட நீட்சியும் இவர்களுக்கும் ஏற்படும் என்பதில் துளியும் ஐயமில்லை. தட்டச்சுப் பொறியில் இப்பொழுதுள்ள முறையில் ஒரு கட்டுரையை அடிக்க 2 மணிநேரமும் 2 பக்கத்தாளும் தேவையென்றால் புதிய முறையில் $2\frac{1}{2}$ மணிநேரமும் $2\frac{1}{2}$ பக்கத்தாளும் தேவைப் படுகின்றன. அச்சுக் கோப்புக்கும் அதே நிலை ஏற்படுவதை, ஒரு தட்டச்சாளர் தட்டச்சு செய்தும், அச்சுக் கோப்பாளர் அச்சுப் கோப்புச் செய்தும் பார்த்துக் கொள்ளலாம்.

5. இனி, தமிழ் நெடுங்கணக்கைச் சில மூடர்கள் நீட்டிச் சொல்வது உண்மையன்று. நீட்டிச் சொல்வதால் தமிழ்மொழிக்குப் பெருமைக்குறைவு ஏற்படட்டும் என்பது அக்கலப்பினத் தமிழரின் கருத்தாகும். தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் மொத்தம் எப்படிக் கணக்கிட்டாலும் 40-க்குள் தான் அடங்கும். மண்டைக் கனப் பேராசிரியர்கள் கூறுவதுபோல் 247 அன்று. **க** வையும் **கா** வையும் ஈரெழுத்தாகக் கணக்கிடும் அவர்களின் மூளைத்திரட்சி கோளாறும் குழப்பமும் நிறைந்ததாக இருத்தல் வேண்டும். மேலும், 40 எழுத்துகளிலும் முழு வடிவ எழுத்துகள் 26-ம், ஒட்டுக்குறிகள் 14-மேயாகும். விளக்கம் வருமாறு.

1)	உயிர் எழுத்துகள் அ, இ, உ, எ, ஐ, ஒ, ஔ, ஃ	8
2)	மெய்யெழுத்துகள்	18
	ஆக எழுத்துகள் மொத்தம்	26

(ஒட்டுக்குறிகள் சேர்ந்தன புதிய எழுத்துகளாகா. அவ்வாறாயின் ஒவ்வொருவர் எழுதும் ஒவ்வொரு வகை எழுத்தும் ஒவ்வொரு தனித்தனி எழுத்தே.)

3) குறிகள்: 14. விளக்கம் வருமாறு.

1.	ஆகாரக் குறி. (ா)	1
2.	எகர ஒற்றைச்சுழிக்கொம்பு. (ெ)	1
3.	ஏகார இரட்டைச் சுழிக்கொம்பு. (ே)	1
4)	ஐகாரக் கொம்பு. (ை)	1
5)	இகர வலப்புறமேல் வளைவு. (கி)	1
6)	ஈகர வலப்புற மேற்சுழி. (கீ)	1
7)	உகரக்குறிகள்.	3

1. இடப்பக்க மேற்சுற்றுச்சுழி. (கு)
2. வலப்பக்கக் கீழ்க்கோடு. (சு)
3. வலப்பக்கக் கீழ்ச்சுழியும் பக்கக்கோடும். (து)

8) ஊகாரக் குறிகள். 3

1. இடப்பக்க மேற்சுற்றுச்
சுழிநுனி சுருளல். (கூ, மூ)
2. வலப்பக்கக் கீழ்க்கோடும் சுழியும். (தூ)
3. வலப்பக்கக் கீழ்ச்சுழியும்
பக்கக் காலும் (ணூ)

9) உகர நெடிலின் உட்குறி. (ஊ) 1

10) ஒகர நெடிலின் கீழ்ச்சுழி. (ஓ) 1

ஆக மொத்தம். 14

(டகர இகரத்தில் (டி) உள்ள குறி, பகர இகரத்தின் (பி) வேறுபாட்டை உணர்த்த அடிக் கோட்டைத் தொட்டது.)

எனவே மிகத் தெளிவாகவும் குழப்பமின்றியும் உள்ள தமிழ் நெடுங்கணக்கு இப்பொழுதைய நிலைக்குத் திருத்தம் வேண்டுவ தன்று. தம் தம் பெயரை நிலைநிறுத்திக் கொள்வதும், தந்தை பெரியாரின் பெயரால் தங்களுக்கு ஒவ்வொரு சாய்காலையும் இடத்தையும் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதுமே இக்கால் கொணரும் எழுத்துச் சீர்த்திருத்தத்தின் நோக்கமாக இருக்க முடியுமே தவிர, உண்மையாகத் தமிழ்மொழி நெடுங்கணக்குக்குத் தேவையான திருத்தம் அன்று. தமிழ் எழுத்துகளைவிட மிகச் சிக்கல் நிறைந்த எழுத்துகளைக் கொண்ட மொழிகள் உலகில் நூற்றுக்கணக்கில் உள. அங்கெல்லாம் இவ்வகைத் திருத்தங்களை எந்த அறிஞனோ அரசோ பரிந்துரைக்க வில்லை.

6. மேலும், இச்சீர்திருத்தத்தால் வரும் கேடுகளையும் அரசும் பிறரும் உய்த்துணர்ந்து கொள்ளல் வேண்டும். ஐகார ஈறு சில சொற்களில் நீங்கியதனால் தமிழ்மொழி வேறு திசை மொழியாகி விட்டதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

தமிழ்	**மலையாளம்.**
குடை	குட
மழை	மழ.

அகரவுயிர் நீங்கியதனாலும் வேறு மொழியாகி விட்டது.

தமிழ்		**தெலுங்கு.**
அவன்	—	வன்—வாறு—வாடு.
அவர்	—	வாரு

அடுத்து, உயிர்மெய் எழுத்தின் நெடிலோசைக்குக் கால் போட்டு எழுதுவதைச் சிலர் அகர வுயிர்க்கும் கால் போட்டு எழுதும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறுர்கள். (ஆண்டு-அாண்டு) காலப்போக்கில் அவர்கள் சீர்திருத்தம் என்னும் பெயரால் ஈகார, ஊகார, ஏகார, ஓகாரம் ஆகிய நெடிலோசைகட்கும் உயிரெழுத்துகளில் கால்போட்டு எழுதும் வழக்கத்தையும் கொள்ளலாம். அப்பொழுது எந்தக் கரணியம் கொண்டும் அதைத் தவறென்று சொல்ல முடியாது.

7. மேலும், இத்தகைய சீர்திருத்தத்திற்கு இடம் கொடுத்தால் காலப்போக்கில் றந்நகரத்தையும் (ன) டண்ணகரத்தையும் (ண) வேண்டாமென்று சொல்லிக் கீழ்வருமாறு எழுதுவர்.

(எ-டு) மனம்—மநம்.

பணம்—பநம்.

அண்ணன்—அந்நந்.

—இதை அக்காலத்தில் உள்ளவர்கள் தவறென்று சொல்ல மாட்டார்கள். அல்லது சரியென்று சொல்ல மாட்டார்கள் என்பதற்கு இப்பொழுதுள்ளவர்கள் எந்த உறுதியும் தர முடியாது. அப்பொழுதுள்ளவர்கள் தமிழ்ப் பற்றிலும் தமிழறிவிலும் இன்றுள்ள மகாதேவன்களைக் காட்டிலும், தமிழ்க் காட்டிக் கொடுப்பில் இன்றுள்ள தெ. பொ. மீக்களைக் காட்டிலும் விஞ்சியவர்களாகவே இருப்பர். தட்டச்சு, மின்னணு முறைக்கும் அத்திருத்தம் மிகமிக ஏந்தானது என்றே கூறும் கொண்டலின் அண்ணன்மார்கள் அன்று இருப்பர்.

8. அதன்பின் சிறப்பு **ழ**கரம் போய், மூன்று லகர இனம் (ல,ள,ழ) போய் ஒன்று எஞ்சினுலும் எஞ்சும்,

(எ-டு) பழம்—பலம்

பள்ளம்—பல்லம்.

9. மேலும், ஏற்கனவே பெரியார் தம் எழுத்துச் சீர்திருத்தக் கருத்தில் **'ஞ்' 'ங்'** தேவையில்லை யென்றும் சொல்லியிருக்கிறுர். பெரியாரின் 'சீடர்'களுக்குப் பெரியாரின் கட்டளையே 'கடவுள்' கட்டளையாகையால், நாளை, வலிந்த பெரியார் தொண்டர் நாட்டை ஆளும் போது, **'பிஞ்சு'** என்பதைப் **'பின்சு'** என்றும் **'பங்கு'** என்பதைப் **'பன்கு'** என்றும் எழுதச் சொல்லலாம், அக்கால் மேலும் எழுத்துகள் குறையும் என்று வழக்காடப் பெறும். அதுபொழுது தடியெடுத்தவன் தண்டல்காரனுக இருப்பான் ஆகையால், பொதுமக்கள் எல்லாரும் இன்றைவிட இளித்தவாயர்களாகவே இருப்பார்கள்.

10. இறுதியாக நாம் அரசுக்குச் சொல்வது: நீங்கள் கொண்டு வந்த எழுத்துத் திருத்தம் அறிவுடையதும் ஆகாது; அன்புடையதும் ஆகாது. தமிழ் மொழிமேல் அக்கறை கொண்டதும் ஆகாது. ஏதோ ஒரு வகையில் பெரியார் பெயரால் அவர் தம் பின்பற்றுளர்களை நிறைவு செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன் இதனைக் கொண்டு வந்தீர்கள் என்றே கருத வேண்டியுள்ளது. இவ் வகையில் நீங்கள் பட்ட விரைவை ஏன் அவரின் பிற திருத்தங்களின் வகையில் மேற்கொள்ளவில்லை? அவற்றுள் ஒன்று தானும் செய்ய நீங்கள் துணிவு கொள்ளாதது ஏன்? பிராமணர்களின் எதிர்ப்பை நீங்கள் வலிந்து தேடிக் கொள்ள விரும்பவில்லை என்பதைத் தவிர வேறு என்ன கரணியம் இருக்க முடியும்? மற்று, தமிழ் மொழியின் முன்னேற்றத்தில் உங்களுக்கு உண்மையிலேயே அக்கறையிருக்கு மானால், அதனைத் தூய்மையாக எழுத வேண்டுமென்றோ, அதில் பிற மொழிச் சொற்களோ, எழுத்துகளோ கலக்கக் கூடாதென்றோ ஏன் நீங்கள் உத்தரவிடவில்லை. அப்படிச் செய்வதற்கு உங்களுக்குத் துணிவும் இல்லை; அன்பும் இல்லை; அக்கறையும் இல்லை. பாலுக்கும் காவலாய்ப் பூனைக்கும் தோழனாய் இருந்து மக்களை ஒரு வகையில் ஏமாற்றி, உங்கள் சாய்காலை நிலைநிறுத்திக் கொள்ள விரும்பு கின்றீர்கள். வேண்டுமானால், அல்லது கட்டாயமாகத் தேவை என்று நீங்கள் உணர்ந்தால், தட்டச்சுப்பொறி, மின்னணுப்பொறி ஆகிய வற்றிற்கு மட்டுமே, இவ்வெழுத்துச் சீர்திருத்தம் பொருந்தும் என்று நீங்கள் அறிவித்திருக்கலாம். அதுவன்றி ஒரேயடியாக எல்லாருக்கும் இதை அறிவித்தது, ஒரு மிகச்சிறுபான்மையருக்காக மிகப் பெரும்பான்மையரைக் கட்டுப் படுத்தும் குடியுரிமைக் குற்றத்துக்கும் நீங்கள் ஆளாகியிருக்கிறீர்கள்!

அறனின்றி, அன்பும் இன்றி, அறிவைப் புறக்கணித்து, நீண்ட நெடுங்காலமாக வழங்கி வந்த ஒரு தூய்மை மொழியின் பெருமையுணராமல், அதன் சிதைவைப் பற்றி அக்கறை கொள்ளாமல், அதன் எழுத்துக்களை மட்டும் திருத்தப் புறப்பட்டு விட்ட உங்கள் அதிகார வல்லாண்மையைக் காலமே முடிவு செய்யட்டும்.

பெருஞ்சித்திரன்



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு: சஉ

வற்றக் காய்ந்த வறற்களிப் பிளவை
துற்றப் பொழிதரத் துளும்புநீர் ஏரிக்
கொடுங்கரை யிரிந்தூர் குலைவுறு முன்னம்
பாய்கால் எற்றுப் பயன்கொளு பான்மையின்
ஆய்வழித் தேங்கிய ஆக்கம்
சாய்வழிச் சாய்முன் சாய்த்தலும் நன்றே!

பொழிப்புரை: அடி மண்ணும் ஈரம் வற்றும்படி காய்ந்து வறண்ட களிமண் நிலத்து, வெடித்துப் பிளந்த பிளவுகள் மீண்டும் நெருங்கி இணையுமாறு பொழிந்த மழையால் நிரம்பித் துளும்புகின்ற ஏரியின் வளைந்த கரை உடைந்து, அண்டையயல் ஊர்கள் நிலை குலையுமுன், அவ்வூர் மக்கள் வடிகால் வெட்டி, வீணாய்ப் போகும் அவ்வேரி நீரைப் பயன் கொள்ளுதல் போல், ஏதோ ஓர் ஆகின்ற வழியான் வந்து தேங்கிக் கிடக்கும் ஆக்கம், தானே கட்டுடைத்துக் கொண்டு அது சாய வேண்டிய வழிச் சாய்வதற்கு முன்னம், அதனைப் பல்வகைப் பயன்களுக்கும் பலர்பாலும் தாழும்படி செய்தல் அனைத்தினும் நன்றாம் என்க.

விரிப்பு: இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

ஏதோ ஓர் ஆகின்ற வழியால் ஒருவர் பால் வந்து தேங்கிக் கிடக்கும் செல்வம், அதுதானே வழியில் கழிந்து போகுமுன், அதனைப் பலர்க்கும் பயன் தரும் வகையில் பயன்படுத்த முயற்சி செய்வது நல்லது என்னும் இயற்கை உண்மையை எடுத்துக் கூறுவதாகும் இப்பாடல்.

நன்றாக நீர் வறளும்படி காய்ந்து பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கும் களிமண் நிலத்தில், அவ்வெடிப்புகள் பொருந்தி இணையும் படி மழை பொழி தருகிறது. அதனால் ஏரி நிரம்பி நீர் துளும்பி நிற்கிறது. நீரின் அழுத்தம் தாளாமல் கரை உடைப்பெடுத்துக் கொள்ளும்; அதனால் அண்டையயல் ஊர்கள் முழுகி அழியும் என்பதை முன்னுணர்ந்து கொண்ட மக்கள் அதற்கு வடிகால் எடுத்து

நீரை ஒழுங்குபட வாய்க்கால் வழிச் செலுத்திச் செய்மையிலுள்ள வயல்களுக்குப் பாயும்படி செய்கின்றனர். அதுபோல் நிரம்பிய செல்வம் ஏதோ ஓர் ஆகும் வழியால் ஒருவரிடம் வந்து தேங்கு கின்றது. அதனை அவ்வாறே தேக்கி வைத்திருப்பின், அது மீண்டும் ஏதோ ஒரு போகும் வழியில் போய்விடும். அந்நிலையில் அது பயன் ஒன்றும் பயவாது, அழிவையும் உண்டாகிவிடும். அதனை முன் னுணர்ந்து கொண்டு, அதனைப் பயனுடைய வழிகளுக்குச் செலவிட வேண்டும்; அதுவே அறமும் உலகப் பயன் கருதியதும் ஆகும் என்பது இப்பாட்டு.

வற்றக் காய்ந்த: அடி நீரும் வற்றிப் போகும்படி வெயிலிற் காய்ந்த.

வறல் களிப் பிளவை: வறண்டு வெடித்த களிமண் பிளவுகள்.

துற்ற: பொருந்தி ஒன்றோடு ஒன்று இணையும்படி.

பொழி தர: மழையானது நன்கு பொழிய.

துளும்பு நீர் ஏரிக் கொடுங்கரை: நிறைந்து துளும்புகின்ற நீரையுடைய ஏரியினது வளைந்த கரை.

இரிந்து: இடிந்து விழுந்து;

ஊர் குலைவுறும் முன்னம்: அண்டை அயல் ஊர்கள் நிலை குலையும் முன்.

பாய்கால் எற்று: அந்நிரம்பிய நீர் பாய்ந்து ஓடித் தேவை யான செய்மை நிலத்திற்குப் பயன்படும்படி வாய்க்கால்களை எடுத்து;

பயன் கொளும் பான்மையின்: அந்நீரின் பயனை முழு தாகக் கொள்ளும் தன்மை போல்.

ஆய்வழித் தேங்கிய ஆக்கம்: ஏதோ ஓர் ஆகின்ற வழியில் வந்து தேங்கிய செல்வம் முதலிய ஆக்கங்கள்.

சாய்வழிச் சாய்முன்: ஏதோ ஒரு வழியில் முழுதும் வீழ்ந்து போகு முன்.

சாய்த்தலும் நன்றே: நாமே, அச்செல்வம் நல்ல வழிக்குப் பயன்படும்படி ஈடுபடுத்துவதும் நல்லறமாகும்.

வற்றக் காய்ந்த நிலம் என்றதால் முன் வறுமையுற்ற நிலை உணர்த்தப் பெற்றது.

வறற்களிப் பிளவை என்றதால் வறுமையால் தாக்குண்டவர் தம்முன் பூசலிட்டு உறவும் உற்றமும் வேறுபடப் பிரிந்து நின்ற நிலை கூறப்பெற்றது. துற்றப் பொழி தர என்றதால், செல்வம் வந்த விடத்து அப்பிளவுகள் நீங்கி ஒருமையுறும் இயற்கைத் தன்மை காட்டப் பெற்றது. துளும்புதல், நீர் அளவு மீறலால், தன் இயங்கு நிலை அழுத்தம் மிகுந்து அசைவுற்றுக் கரை மீற முற்படுதல்.

கொடுங் கரை: வளைந்த கரை.

ஏரி: ஏருக்குப் பயன்படும் நீர் தேங்கியிருக்கும் நிலை.

இரிதல்: இடிந்து விழுதல், முரிதல், இணைவு அறுதல்.

பாய்கால்: நீர் பாய்ந்தோடும் வாய்க்கால்.

ஆய்வழி: ஏதோ ஒரு வகையான் ஆகிவரும் வழி.

பரியினும் ஆகாவாம் பாலல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம.

—என்னும் குறளை நினைவு படுத்தியது இக்கருத்து.

சாய்வழி: ஒரேயடியாகப் போகும் வழி.

இவ்விடத்துக்,

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

—என்னும் குறளை ஓர்க.

வாய்க்கால் வெட்டி விடாமைப் பொழுது, ஏரி நீர் கரையுடைத்து அண்டை அயல் ஊர்களுக்கு அழிவை உண்டாக்குதல் போல், அற வழியில் செலவு செய்யப் பெறுமல் தேங்கியுள்ள பெருஞ்செல்வம் வேறு வழியிற் கழிந்து குற்றங்களையும் தீங்குகளையும் உண்டாக்கும் என்க.

இங்கு,

ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான்.

—என்னும் மொய்ம்மொழியை நினைக்க.

செல்வம் தேங்குதல் அரிது. ஏதோ ஒரு வகையான் தேங்கி நிற்பின் அது நல்வழிக்குச் செலவிடப் பெறுதல் வேண்டும். அல்லாத வழி, அஃது அவ்வழியில் சென்று அது குற்றங்களையும் கொடுமை களையும் விளைவிக்குமாம் என்க,

— இது, **காஞ்சிப் பொதுவியல்** என் திணையும் **முது காஞ்சி** என் துறையுமாம் என்க.

என் இலங்கைச் செலவு.

—பெருஞ்சித்திரனார்.

8. இடைத் தங்கல்

பலாலி வானூர்தி நிலையத்தினின்று யாழ்ப்பாணம் செல்லும் வண்டிச் சாலை ஒரே நேராக இருந்தது. இருபுறமும் கீற்றுப் படல்கள் அடைக்கப் பெற்றுச் சுவர்கள் போல் மறைந்திருக்க, இடையில் வண்டி சென்றது, விடுகளுக் கிடையே ஊடுருவிப் போவது போல் இருந்தது. இடையிடையே அடர்ந்த பனைகளும் தென்னை களும் காட்சியளித்தன. செக்கச் செவேல் என்று பழுத்துத் தொங்கும் மிளகாய்களுடன் காணப் பெற்ற மிளகாய்த் தோட்டங்கள் என்னை வியப்பில் ஆழ்த்தின. நடுநடுவே வீடுகளின் முன் வாயிற் புறங்களில் மிளகாய்ப் பழங்கள் காய வைக்கப் பெற்றிருந்த காட்சிகள் தமிழகத்தின் சிற்றூர்ப் புறங்களை நினைவூட்டின. இவற்றைப் பார்த்தவுடன் திருச்சி வானூர்தி நிலையத்தில் என்னைக் கண்டு உரையாடிய யாழ்ப்பாண அன்பரொருவர், "இலங்கையில் உணவு உங்கள் இயல்பான நிலைக்குச் சற்று மாறுபட்டிருக்கும். மிகுதியான காரத்தை இலங்கையில் உண்ணுவார்கள். எனவே போனவுடன் உங்களுக்கென்று கொஞ்சம் காரத்தைக் குறைத்துச் செய்யச் சொல்லுங்கள். இல்லையென்றால் வயிற்றுக் கடுப்பு வரலாம்" என்று எச்சரிக்கை செய்தது. நினைவுக்கு வந்தது. ஆனால் எனக்கு இப்பொழுது வயிற்றுக் கடுப்புக்கு முன்னதாக மனக்கடுப்புதான் வந்திருந்தது. ஒருவகை ஏமாற்றமும் என் உள்ளத்தில் குடி கொண்டிருந்தது. அவமதிப்புச் செய்து விட்டதாகவும் நான் கருதி திரு. க. பொ. இரத்தினத்தை மிகவும் நொந்து கொண்டிருந்தேன்.

இடையில் **சிறீக்கந்தராசா** குடும்பத்தை நான் சந்திக்கா மலிருந்தால் என்னாகும்? அடடடா! இப்படியொரு நிலை நமக்கு வந்திருக்கக் கூடாதென்று பலவாறு எண்ணிக் கொண்டு வண்டியில் போய்க் கொண்டிருந்தேன். அண்டையில் அமர்ந்திருந்த தமிழக அன்பர் வேறு இடையிடையே பொருமிக் கொண்டிருந்தார். ஆனால், வண்டியில் எங்களோடு ஏறிய இப்பிக் கூட்டத்தினர் என் மன நிலைக்குச் சற்று ஆறுதலான உணர்வை உண்டாக்கினர். எங்கும் எதற்கும் கவலைப் படாமல் நாடுகளைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்றே ஒரே குறிக்கோளோடு அலைகின்ற அவர்கள் எவர்தம் வரவை எதிர்பார்த்திருந்தனர்? எவர் வந்து வழியனுப்ப வேண்டும் என்று விரும்புகின்றனர்? அவர்களின் நிலை எனக்கு ஒருவகை அமைதியைக் கொடுத்தது என்றே சொல்ல வேண்டும்.

எங்களின் மூடுவண்டி யாழ்ப்பாணத்தின் கடைத்தெருப் பகுதியில், உந்துவண்டி நிலையத்திற்கு அருகில் வந்து நின்றது. அங்கிருந்து ஒரு வாடகி (Taxi) யில் திரு. சிறீக்கந்தராசாவும் அவர்

துணைவியும் என்னை அவர்களின் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். சென்னை நண்பர் இடையில் இலங்கை வானூர்தித் பதிவு அலுவலகத்திலேயே இறங்கி விட்டார். சிறீக்கந்தராசாவின் மாமனார் புலவர் **வேலனார்** நான் அறிமுகப்படுத்தப் பெற்றவுடன் மிக அன்பாகவும் வியப்பாகவும் என்னை வரவேற்றார். தொடக்க நாளிலிருந்து தாம் தென்மொழி படிப்பவர் என்று தம்மை அவர் அறிமுகப் படுத்திக் கொண்டார். அதன்பின் பழங்களும், குளிர்குடிப்பும் கொணர்ந்து தந்து மிக்க அன்புடன் என்னை அவர்கள் விருந்தோம்பினர். அன்று முழுதும் அங்கேயே தங்கியிருக்க விரும்பி வேண்டினர். ஆனால் நான் திரு. க. பொ. இரத்தினம் வீட்டிற்குச் செல்ல வேண்டிய முறையினையும் இன்றியமையாமையையும் கூறி, அவருடன் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளச் செய்தேன். உடனே, புலவர் வேலனார் அவர்கள் அண்மையிலிருந்த திரு. **தியாகராசா** என்னும் அன்பர் ஒருவர் மனைக்குச் சென்று, அங்கிருந்த தொலைபேசி வழியாக வேலனைக்கு க. பொ. இரத்தினம் வீட்டிற்குத் தொடர்பு கொண்டதில், கொழும்பில் பாராளுமன்றம் நடந்து கொண்டிருப்பதாகவும், அண்மையில் பரபரப்பூட்டிய புலிகள் இயக்கத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர்கள் மிகவும் அக்கறையுடன் மன்ற நடவடிக்கைகளில் கலந்து கொண்டிருப்பதாகவும், திரு. க. பொ. இரத்தினமும் கொழும்புவில் தான் இருப்பதாகவும், என்னை வேலனை அழைத்துப் போக இரத்தினம் மகனும் **சுதந்திரன்** ஆசிரியர் திரு. **மகேசன்** அவர்களும் உடனே அங்கு வருவதாகவும் தெரிய வந்தன.

அவ்வாறே சில நிமையங்களில் க. பொ. இ. அவர்கள் மகனும் திரு. மகேசன் அவர்களும் இன்னும் ஒரிருவரும் வேலனார் அவர்கள் வீட்டிற்கு வந்து என்னைக் கண்டு, நான் கொடுத்த தொலைவரி வந்து சேரவில்லை யென்றும், என் வரவு பற்றி வானூர்தி நிலையத்திற்குத் தொலைபேசி வழி என் பெயரைக் கூறிக் கேட்டதில், அப்படிப்பட்ட ஒருவர் வரவில்லை என்று கூறியதாகவும், எனவே தாங்கள் வானூர்தி நிலயத்திற்கு அழைக்க வராத குறை நேர்ந்ததாகவும் அதற்காக வருந்துவதாகவும் கூறி மன்னித்துக் கொள்ளக் கேட்டுக் கொண்டனர். நான் 'அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டாம்' என்று கூறி அவர்களை ஆறுதல் படுத்தினேன். இருப்பினும் திரு. மகேசன் அவர்கள் தமக்குச் செய்தி மிகப்பிந்திதான் தெரிவிக்கப் பெற்றது என்றும், இல்லெனில் நல்ல முறையில் வரவேற்பு நடந்திருக்கும் என்றும் தம் ஆற்றாமையையும் அன்பையும் வெளிப்படுத்தினார். அவர்களையெல்லாம் அமைதிப் படுத்தியதுடன், அறியாமலும் எதிர்பாராமலும் நேர்ந்த ஒரு நடைமுறைக் குறையைப் பெரிதாக எண்ணாமல் நானும் மன அமைதியுற்றேன். அடுத்து, அவர்கள் நண்பகல் உணவை திரு. தியாகராசா அவர்கள் தம் வீட்டில் ஏற்பாடு செய்திருப்பதாகவும், உணவு முடித்தவுடன் சிறிது நேரம் அங்கேயே நான் ஓய்வு கொள்ளலாம் என்றும், அதன்பின்

பிற்பகல் நான்கு மணியளவில் தாங்கள் வந்து வேலணைக்கு அழைத்துப் போவதாகவும் கூறி விடைபெற்றுச் சென்றனர். சிறிது நேரம் கழிந்து புலவர் வேலனூர் அவர்களும் சிறிக்கந்தராசாவும் என்னை, அதே தெருவில் இரண்டு மூன்று வீடுகள் தள்ளியிருந்த திரு. **தியாகராசா** அவர்களின் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

திரு. **தியாகராசா** நான்கைந்து திரைப்பட அரங்குகளுக்கு உரிமையாளர். அவரும் அவர் மனைவியாரும் குழந்தைகளும் மிகவும் அன்புடன் என்னைப் பேணிப் பகல் விருந்து அளித்தனர். பலமுறை

தியாகராசா

தியாகராசாவும் நானும் கேட்டுக் கொண்டதற் கிணங்க புலவர் வேலனூரும் எங்களுடன் உணவுண்டார். விருந்துண்ணுகையில் இருவகை யான அரிசிச் சோறு எங்கட்குப் பரிமாறப் பட்டது. ஒன்று கைக்குத்தல் அரிசிச்சோறு. மிகவும் சிவப்பாக இருந்தது. நான் சிறைகளில் உண்ட கைக்குத்தல் அரிசிச் சோற்றை விட மிகவும் சிவப்பாகவும் பெரிதாகவும் இஃது இருந்தது. நான் ஒருவேளை இதை உண்ண மாட்டேனோ என்று வெண்மையான அரிசிச் சோற்றையும் (அந்த அரிசி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப் பெற்றதாம்) சமைத்திருந்தனர். இலங்கைக்காரர்கள் கைக் குத்தல் அரிசியையே மிக விரும்பிச் சாப்பிடுகின்றனர். செல்வர் வீடுகளில் இதைக் குத்துவதற்கென்றே தனியாக ஆட்களையும் அமர்த்தியிருக்கின்றனர். மற்றபடி கடைகளிலும் இவ்வரிசி தான் மிகுதியாகக் கிடைக்கிறது.

திரு. தியாகராசா அந்த அரிசிச் சோற்றை மிக விரும்பி உண்டார். நானும் விருப்பத்தோடு அந்த அரிசிச் சோற்றையே பரிமாறச் செய்தேன். அவர்கள் தயங்கித் தயங்கி எனக்கு அதைப் பரிமாறினர். குழம்போ சொல்ல முடியாத காரந்தான். எனினும் அளவாகக் குழம்பிட்டுக் கொண்டு உண்டேன். காரத்தை மிக விரும்பி உண்ணும் எனக்கும் அது மிகுதியாக உறைத்தது.

9. வேலணை புறப்பாடு.

உணவுக்குப்பின் சிறிது நேரம் நன்றாகப் படுத்து உறங்கினேன். மாலை 4-30 மணியளவில் பண்டிதர் க. பொ. இ. அவர்களின் மகன் நிமலனும் (ஏறத்தாழ இருபத்து மூன்று அகவையுடைய இளைஞர் இவர்) திரு. கோவை மகேசன் அவர்களும், மலையுந்து ஒன்றில் வந்து என்னை அழைத்துச் சென்றனர். திரு. கோவை மகேசன் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க அவர் வீட்டிற்குச் சென்றோம். அவர் துணைவியார் அன்புடன் எங்களை வரவேற்றார். திரு. **கோவை**

மகேசன் 'சுதந்திரன்' ஆசிரியராகப் பணியேற்றுள்ளவர். சுதந்திரனில் அவர் எழுதும் ஆசிரியவுரைகள் விறுமிக்கன. தமிழீழ விடுதலைக் கவனத்திற்கு இளைஞர்களை இட்டுச் செல்லும் வல்லமை சான்றன இவர் உரைகள். பழகுவதற்கு மிக இனிமையும் எளிமையும் உடைய நல்லன்பினர் இவர். அடக்க ஒடுக்கமாகப் பழகும் உயர்ந்த பண்பினர். தமிழீழம் விடுதலை பெற்று உரிமை நாடாகத் திகழ வேண்டும் என்பதில் தணியாத வேட்கை கொண்ட நெஞ்சினர் இவர்.

கோவை மகேசன்

இவரும் இவர் துணைவியாரும் பொதுத் தொண்டில் தங்களையே ஒப்படைத்துக் கொண்டு, அல்லும் பகலும் **'சுதந்திரன்'** இதழைப் பேணி வளர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருவது மிகவும் பாராட்டத்தக்கதும், போற்றத்தக்க துமாகும். எளிய சிறிய ஒரு பகுதிக் குடி யிருப்பில் இவர் வாழ்க்கை நடத்துகிறார். போதுமான வருமானம் இன்றி மிகவும் வறிய நிலையில் இவர் வாழ்ந்து வந்தும், நாட்டுப் பற்றில் எவருக்கும் சளைக்காத வகையில் இவர் இயங்கி வருவது பெரு நிறைவை எனக்குத் தந்தது. மகப்பேறு அற்ற நிலையில் இவர் ஈடுபாடு முழுவதும் தமிழீழ உரிமைப் போராட்டமாகவே இருந்து வருவது பெருமைக்குரியது. யாழ்ப்பாணத்திலேயே பிறந்து வளர்ந்து கல்வி கற்று ஒரு தூய தமிழ் விடுதலை மறவராக இயங்கிவரும் இவர் ஒரு பிராமணர் என்று கேள்விப்பட்ட பொழுது, மிகவும் வியப் படைந்தேன். பூணூலும் அணியாமல், தம் குல உணர்வு எதுவும் கொள்ளாமல் தம்மை ஒரு தனித்தமிழராகவே ஆக்கிக் கொண்டுள்ள இவர் தொண்டு தமிழீழ விடுதலையுணர்வுக்கு மிகவும் தோன்றாத் துணையாக வாய்த்துள்ளது நமக்குக் கிடைத்த ஒரு நற்பேறே!

இவரும் இவர் துணைவியாரும் என்னை மிகுந்த அன்புடனும் ஒருவகைப் பாசத்துடனும் வரவேற்றுத் தேநீர் அருந்தச் செய்தனர். சிறிது நேரம் அவருடன் தமிழ் நாட்டு அரசியல் நிலைகள் பற்றியும், தி.மு.க. வின் வீழ்ச்சி, அதி.மு.க. வின் எழுச்சி பற்றியும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இங்குள்ள தமிழர்களின் துணை நிலைகள் உதவி உணர்வுகள் பற்றியும் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந் தேன். கலைஞர் மேலும் தி.மு.க. வின் மேலும் உயிரன்பும் மதிப்பும் கொண்டிருக்கின்றார் திரு. கோவை மகேசன். தமிழகத்தின் அரசியல் நடவடிக்கைகளிலும் உயர்ச்சியிலும் விடுதலைப் போராட்ட உணர்விலும் மிகவும் அக்கறையும் ஆர்வமும் கொண்டிருக்கின்றார். மறைந்த தமிழர் தலைவர் **செல்வா** அவர்கள் தொடங்கிய **சுதந்திரன்** கிழமையிதழில் அவர் காலத்திலிருந்தே தொடர்பு கொண்டுள்ளார் இவர். தந்தை செல்வா அவர்களின் பேரன்பையும்

பேராதரவையும் பெற்றவர். அதேபோல் இன்றுள்ள தமிழீழ எதிர்க் கட்சித் தலைவரும் தமிழினத் தலைவரும் ஆகிய திரு. **அமிர்தலிங்கம்** அவர்களின் மேல் பெருமதிப்பும் பேரன்பும் கொண்டவர் திரு மகேசன். அவர் ஓர் உடன் பிறப்புப் போலவே என்பால் அன்பும் மதிப்பும் கொண்டு பழகியதை என்னால் மறக்கவே முடியாது.

அதன்பின், திரு. கோவை. மகேசன் அவர்கள் பிறகு வந்து என்னைப் பார்ப்பதாகக் கூறி எங்கட்கு விடை கொடுத்து வழி யனுப்பினர். அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தம்பி நிமலனுடன் மகிழுந்தில் ஏறியமர்ந்து வேலணை புறப்பட்டேன். மணி ஏறத்தாழ 5-30 ஆகியிருந்தது. வண்டி ஓட்டுதலில் நிமலன் நன்கு தேர்ச்சி பெற்றிருந்ததை, அவர் வண்டியை எடுத்த வேகத்திலும், போக்கு வரத்து நெருக்கடி நிறைந்த சாலைகளிலும் அவர் வண்டியை விரைந்து ஓட்டிச் சென்றதிலும், திருப்பங்களில் கொஞ்சமும் அச்ச மின்றிச் சடக்கு சடக்கென்று வண்டியை ஒடித்துத் திருப்பிய முறை களிலும் தெரிந்து கொண்டேன். ‘தம்பி, இவ்வளவு விரைவாக வண்டியை விட வேண்டாமே; மெதுவாகவே போகலாம்’ என்று அவரிடம் அடிக்கடி எச்சரிக்கையாகச் சொல்ல வேண்டியிருந்தது. நிமலன் கள்ளங் கவடற்ற அன்பு நிறைந்த இளைஞர். படபடவென்று அவர் பேசிய திறனும், தூய அன்பு கலந்த அவரின் கலகலவென்ற சிரிப்பும் என்னை மிகுவாகக் கவர்ந்தன. நெடுநாள் பழகியவர் போல் அவர் என்பால் மிக நெருங்கிப் பழகியதும், நுணுக்கமாக அரசியல் பேசியதும், தமிழீழ விடுதலை உணர்வில் அவர் மேம்பட்டு விளங்கியதும் என்னை வியப்பும் மகிழ்ச்சியும் அடையச் செய்தன. தமிழீழச் சிக்கலை மிக ஆழமாகவும் அடியூன்றவும் என்னிடம் அவர் எடுத்து விளக்கிக் கொண்டே வந்தார். இடையில் ஓரிடத்தில் திடுமென்று வண்டியின் வேகத்தைச் சிறிது தாழ்த்தி, ‘ஐயா, நான் திருமணம் செய்து கொள்ளப் போகும் பெண்ணை நீங்கள் பார்க்க வேண்டும். நான் பார்த்து தேர்ந்தெடுத்த பெண் என் வாழ்க்கைக்குப் பொருத்தமானவள் தானா என்று நீங்கள் மதிப்பிட்டுச் சொல்ல வேண்டும். உங்கள் கருத்தைக் கேட்க வேண்டும் என்பது என் ஆசை. என்ன, அந்தப் பெண்ணிருக்கும் இடத்திற்குப் போகலாமா’ என்றார். எனக்குப் பெரும் வியப்பாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. எதுவும் ஒளிவு மறைவில்லாமலும், என்னிடம் என்ன பேச வேண்டும் என்பதைப் பற்றி ஒரு சிறிதும் தயக்கமும், வெட்கமும் படாமலும், கள்ளமற்று உரிமையுணர்வுடன் பேசுகிறாரே’ என்று ஒருபுறம் மகிழ்ச்சியும் அவர்பால் அளவிறந்த அன்புரிமையும் எனக்கு உண் டாயின. எனவே சிரித்துக் கொண்டே ‘சரி’ என்றேன். வண்டி மிக வேகமாக, சொடுக்கிவிட்ட குதிரையைப் போல எம்பிப் பாய்ந்து சென்றது.

(தொடரும்)

தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்புகள்: பழந்தமிழகத்தில் சாதியிருந்ததில்லை.

பன்மொழிப் புலவர்: **இரா. மதிவாணன். க.மு.**

வேளாப் பார்ப்பான்: பழந்தமிழகத்தில் வேள்வி செய்யும் பார்ப்பனர் வேள்வி செய்யாத பார்ப்பனர் என இருவகையினர் இருந்தனர். வேள்வி செய்யும் ஆரியப் பார்ப்பனர் என்றும் தம்மை பிராமணர், விப்ர (இருபிறப்பாளர்) என்று அழைத்துக் கொண்டனரே யன்றி பார்ப்பனர் என்று அழைத்துக் கொண்டதில்லை. திரவிட மொழிகள் அனைத்திலும் பிராமணர்களை, பிராமணரல்லாதார் பார்ப்பான் என்றே குறிப்பிடுகின்றனர். பார்ப்பனர் என்பது மற்ற இனத்தார் பிராமணர்களுக்கு இட்ட பெயர். பார்ப்பனர் என்னும் சொல்லுக்குப் பிரம்மத்தை நெருங்குபவர் என்றோ, வேதப்பிராமணங் களைக் கொண்டவர் என்றோ, இருபிறப்பாளர், நிலத்தேவர் என்றோ பொருளில்லை.

ஆரியர் வருகைக்கு முன்பே தமிழ்நாட்டில் தமிழப் பார்ப்பார் இருந்தனர் என்பது **'வேளாப் பார்ப்பான் வாளரந்துமித்த'** என்னுந் தொடரால் தெரிகிறது. தமிழப் பார்ப்பனர்க்கும் ஆரியப் பார்ப்பனர்க்கும் இடையிலிருந்த வேறுபாடுகள் பல. பார்ப்பான் என்னும் தமிழ்ச் சொல்லுக்கு நூலோதுபவன், எண்ணியுரைப்பவன் என்று பொருள். தமிழ்ப் பார்ப்பனர் நூலோதுதல் ஓதுவித்தல் மட்டுமின்றி, தம் வாழ்வுக்கேற்ற ஒரு துணைத்தொழிலும் செய்து வந்தனர். உழவு செய்தல், சங்கறுத்தல் போன்ற பல தொழில்களை அவ்வவ்விடத்திற்கேற்ப செய்து வந்தனர். ஆரியப் பார்ப்பனர் உடலுழைப்பு எதிலும் ஈடுபடாமல் பிறரிடம் இரந்து பெற்ற பொருளால் மட்டும் வாழ்ந்து வந்தனர். பத்தாம் நூற்றாண்டினதாகிய 'வட்டாராதனை' என்னும் கன்னட இலக்கியத்தில் பார்ப்பனன் ஏர் உழுது கொண்டிருக்கும்போது பார்ப்பனத்தி கணவனுக்காகக் கஞ்சி எடுத்துச்செல்லும் காட்சி வருணிக்கப்படுகிறது. காட்டில் விறகு வெட்டிக்கொண்டு வந்து விற்கும் பார்ப்பானைப் பற்றிய குறிப்பு பிராகிருத நூல்களில் காணப் படுகின்றன. நீலமலையில் வாழும் படகரில் பார்ப்பார் இன்றும் உள்ளனர். அவர்கள் பூணூல் அணி கின்றனர். ஆயின் அவர்கள் தம்மை உயர்ந்த சாதியினர் என்று சொல்வதில்லை. அனைத்துத் தொழில் செய்யும் படகர்கள் எவராயினும் பார்ப்பார் வீட்டில் பெண் கொடுத்துப் பெண்ணெடுத்தும் உறவு

கொள்ளலாம். பார்ப்பார் வீட்டுக்கு மருமகளாக வரும் பெண் அல்லது மருகன் புலால் உண்ணலாகாது. அவர்களுள் நால்வகைப் பிரிவுள தெனினும் உயர்வு தாழ்வற்ற ஒரே இனமாக வாழ்கின்றனர். அவர் களிடை, கோயிற்பூசை, கணியம், கல்வி இவை மட்டும் பார்ப்பார்க் குரிய சிறப்புத் தொழில்களாக உள்ளன. துணைத் தொழிலாக உழுதொழிலைத் தாமே செய்கின்றனர்.

தமிழ்ப்பார்ப்பார் துறவு நிலையில் அந்தணர் என்றழைக்கப் பட்டனர். ஆரியர் துறவுக் கோலத்தில் தென்னாட்டில் புகுந்தபோது தமக்கு ஏற்கெனவே தெரிந்த பார்ப்பனர் என்னும் பெயராலேயே அவர்களையும் சுட்டி அழைத்தனர்.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை அவரவர்க்குத் தெரிந்த தொழிலொடு சார்த்தி, சோவியத்துக் கலைஞர்கள், அமெரிக்க ஆசிரியர்கள், சீனத்து நெசவாளிகள் என்றழைப்பது போல ஆரியரை வேள்விப் பார்ப்பனர் என்று அழைத்தனர். கோவிற்பூசை, ஓதல், ஓதுவித்தல் போன்ற தமிழ்ப் பார்ப்பனரின் தொழில் முழுமையாக ஆரியப் பார்ப்பனரின் கைக்கு நாளடைவில் மாறிய பிறகு தமிழ்ப் பார்ப்பனர் தமக்கு ஏற்கெனவே துணைத்தொழில்களாகக் கொண் டிருந்த உடலுழைப்புத் தொழில்களைத் தலைமைத் தொழிலாகக் கொண்டதால் பார்ப்பார் என்னும் பெயர் மறைந்து செய்யும் தொழிலுக்கேற்ற புதிய சாதிப் பெயர்களால் அறியப்பட வேண்டிய இடர்ப்பாடு வந்துற்றது. அதனால், தமிழ்ப் பார்ப்பார் என்று ஒரு பிரிவினர் இருந்தார்களா என்று வினா தொடுக்கும் இழிநிலை தமிழக வரலாற்றுக்கு நேர்ந்து விட்டது.

தமிழப் பார்ப்பார் ஓதும் மறை நான்கு என்றும் அவர்கள் பறையூரில் வாழ்ந்திருந்தனர் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

"நால்வகை மறையோர் பறையூர்
கூத்தச் சாக்கையன் ஆடலின்"

ஆரியர்க்கு வேதம் மூன்றாகத் தானிருந்தது. அது நான்காக மாறிய காலம் தமிழ் நான்மறைக் காலத்துக்கும் பிந்தியது. நூல்களை மறை என்று அழைப்பது மிகப்பண்டைய மரபு. இசை நூலை **'நரம்பின் மறைய'** என்கிறார் தொல்காப்பியர். மேற்கண்ட சிலப்பதிகார வரிகளில் நால்வகை மறையோர் பிராமணராயின் பறையூரில் குடியிருப்பார்களா, கூத்தச் சாக்கையன் என்று பெயரிட்டுக் கொள்வார்களா என்று எண்ணிப் பார்க்க. தனித்தமிழில்

பெயரிட்டுக் கொண்ட ஆரியப் பார்ப்பனனைக் காண்பது அரிது. **எனவே, இந்தச் சிலப்பதிகார வரிகள் ஐயத்திற்கிடமின்றி தமிழ் நான்மறைகளை ஓதிவந்த மறையோராகிய தமிழப் பார்ப்பாரைக் குறிக்கின்றன என்பதை நடுநிலையாளர் எவரும் உணர்வர்.**

தமிழப் பார்ப்பனர் நாளடைவில் வடமொழி கற்று, வேள்வி முறைகளை ஏற்று, ஆரியப் பார்ப்பனருடன் கலந்து விட்டனர் என்று மறைமலையடிகள் கூறுகின்றார். இதற்கு அறிகுறியாக வேளாளர்க் குரிய பிள்ளை என்னும் பட்டப்பெயர் திருச்செந்தூர் முதலான இடங் களில் உள்ள பார்ப்பனர்க்கு இன்றுகாறும் வழங்கி வருகின்ற தென்றும் அப்பட்டப் பெயரை அவர்கள் மெல்ல மெல்ல மாற்றி வருகின்றனர் என்றும் தாம் கேள்விப்பட்டதாக அடிகளார் குறிப்பிட் டுள்ளார். ஆழ்வார்கள் பாடிய செந்தமிழ்ப் பாடல்களுக்கு உரை யெழுதிய **பார்ப்பனராகிய பெரியவாச்சான்பிள்ளை** என்பவர் பிள்ளைப்பட்டம் பூண்டிருத்தலும் இதற்கு ஒரு சான்றாகும். பார்ப்பு என்பது ஓர் இளமைப் பெயர். கோவை மாவட்டத்தில் இளைஞனையும் சிறுவனையும் பாப்பு என்று அழைக்கின்றனர். இளமையிலேயே நூலோதும் தமிழப் பார்ப்பார்க்கு பூசகர்த்தொழில் கருதி பார்ப்பான், பிள்ளை என்னும் பெயரடைகள் வழங்கி வந்தன. பூசகர்த் தொழில் செய்யும் பழந்தமிழ்ப் பார்ப்பாரின் கிளைப்பிரிவினரான கேரளத்து அம்பலக்காரரும் தமிழகத்து வள்ளுவரில் ஒரு சாராரும் ஆந்திரத்து மதங்கரும் பூணூல் அணிகின்றனர். சைவ வேளாளரான ஆதி சைவர், குருக்கள், பட்டர் என்போர் ஐயர் என்னும் மதிப்புறவுச் சொல்லோடு அழைக்கப்படும் தமிழப் பார்ப்பனர் என்று மறைமலை யடிகளார் நிறுவிக் காட்டியுள்ளார். **திரவிடப் பார்ப்பனரைப் பார்த்தே வேத கால ஆரியப் பார்ப்பனர் பூணூல் அணியும்வழக்கத்தை மேற்கொண்டனர்** என்று தெரிகிறது. **தமிழப்பார்ப்பனர் பூசைச் சடங்குக்காக பூணூல் அணிந்த னர். ஆரியப் பார்ப்பனர் தம் இருபிறப்பை நிலைநாட்டிச் சாதியுயர்வை வெளிக் காட்டிக் கொள்வதற்காகப் பூணூல் அணிந்தனர்.**

மேலைநாட்டு ஆரியர் எவரும் பூணூல் அணியாதவராய் இருக்க, இந்திய நாட்டு ஆரியர் மட்டும் பூணூல் அணிகின்ற செயல் ஒன்றே, அவர்கள் புதிதாகக் கற்பித்துக் கொண்ட நடைமுறைகளை வெளிப் படுத்துகிறது.

மேற்பால் கீழ்ப்பால்: மேற்பால் கீழ்ப்பால் என்னும் சொற்கள், உயிரினும் சிறந்த ஒழுக்கமுடையோரையும் ஒழுக்க மில்லாதவரையும் குறித்ததேயன்றி, பிறப்பால் மரபு வழிவரும் குடும்பத்தையோ, ஒரு குறிப்பிட்ட ஒரு தொழிற்குரிய இனத்தையோ சுட்டுவதன்று.

ஒழுக்கமுடைய சான்றோர் குடியில் பிறந்து ஒழுக்கமிழந்த இழிந்தவன் அக்குடிக்கு மாசு கற்பித்தவனாகக் கருதப்பட்டான். அவனே தன் தகுதியின்மைக்கு நாணி உயிர் விடுவான். அல்லது நல்லுணர்வு பெறும்வரை கீழான இயல்புடையார் சூழலில் இருப்பான். கள், சூது, வரைவின் மகளிர் முதலிய சூழல்களே கீழினங்கட்கு வாழிடமாக அமைந்திருக்க வேண்டும். ஒழுக்கமில்லா கீழியல்பினர் ஒருங்கு கூடி இயங்குதலால் கீழினம் என்று அழைக்கப் பட்டனர். அவரனைவரும் ஒரு குடும்பத்தை அல்லது ஒரு தொழிற் பிரிவை அல்லது சாதியைச் சேர்ந்தவர் அல்லர். ஆதலால் கீழினம் என்னும் சொல் எந்தக் குறிப்பிட்ட சாதியினரையும் குறிக்காது. உயர் குடியிலிருந்து குணங்கெட்டு வந்த பரத்தனும் உழவனின் வீட்டிலிருந்து நெறிகெட்டு வந்த கள்ளனும் ஒரு தீச்செயலில் ஈடுபட்டு கீழினத்தவராய் மறைமுகமாகத் தீங்கிழைத்து வரலாம். இல்லறத்தில் வாழ்ந்து செல்வச் செழிப்போடு காட்சி தருபவன் கயமை புரிந்து பல குடும்பங்களைக் கெடுக்கலாம். அவனும் கீழினமே. அச்சமே கீழ்களது ஆசாரம் என்னும் குறளிலும் வள்ளுவர் கீழினத்தை இப்பொருளில் தான் சுட்டிக் காட்டுகிறார். மேற்பால் இயல்புள்ள சான்றோர் ஏழை எளியவர் வீடுகளில் இருக்கலாம். கீழ்ப்பால் இயல்புள்ள இழிசினர் சீருஞ்செல்வமும் மிக்க பெருங் குடிகளில் இருக்கலாம். இங்ஙனம், ஒழுக்கத்தால் உயர்ந்தார் தாழ்ந்தார் தமிழினத்தில் உண்டே ஒழிய பிறப்பால் உயர்ந்தார் தாழ்ந்தார் இல்லை என்பதை,

> **'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'**
> **'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**
> **கீழில்லார் கீழல் லவர்'**

என்னும் குறட்பாக்களால் அறியலாம். செல்வ நிலையில் ஏற்றத் தாழ்புடையாரை மேல், கீழ் என்பர் ஒழுக்கம் மற்றும் பண்பால் உயர்வு தாழ்வுடையாரையும் மேல், கீழ் என்பர். மேலிருந்தும் மேல்லாதவனாக, தன்னையுணர்ந்தவன் பாண்டியன் நெடுஞ்

செழியன். கீழிருந்தும் கீழல்லாதவளாகத் தன்னையுணர்ந்தவள் பரத்தையர் குலத்திற்பிறந்தும் கற்பரசியாக விளங்கிய மாதவி.

பிறப்பால் உயர்ந்த ஒழுக்க சீலனின் மகனாக இருந்தும் ஒழுக்கம் குன்ற நேரின் அவன் தந்தையின் பெருமை நோக்கியும் கூட அவன் மன்னிக்கப்பட்டதில்லை. பூம்புகாரில் இருந்தாண்ட சோழன் காகந்தன் தன்மைந்தனுக்கு ஒழுக்கக் கேட்டுக்காகக் கொலைத் தண்டனையளித்தான். ஆரியப் பார்ப்பனர் எந்தத்தவறு செய்தாலும் எந்த அரசனும் அவர்களுக்குத் தண்டனை தரமுடியாது. சாதிக் கேற்ப அறஞ்சொல்லும் பாங்கு தமிழினத்தில் என்றும் இருந்த தில்லை. சான்றோர் கயவர் என்னும் இரு பிரிவுகளே மேற்பால் கீழ்ப்பால் எனப்பட்டன.

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்
நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்

என்னும் குறட்பாக்களில் அன்பு பண்பு ஒழுக்கம் போன்ற உயர் பண்புகளே மேற்குலத்தையும் கீழ்க்குலத்தையும் வரையறுப்பதைக் காணலாம். குலம் என்பது வளர்ப்புச் சூழலும் வாழுஞ் சுழலுமே யன்றி பெற்றோரும் உறவினருமாகிய சாதியன்று. **'ஈன்று புறந் தருதல் என்றலைக் கடனே'** என்னும் புறப்பாடலில் **'நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே'** என நல்ல பண்பட்ட குமுகாயச் சூழலை நிலவச் செய்வது அரசனின் பொறுப்பாகக் கூறப்பட் டிருத்தலைக் காண்க. **'அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்'** என்று இளங்கோவடிகளும் **பெரியாரைத் துணைக் கோடல், சான்றோரினத்திருத்தல்** குறித்துப் பிற சான்றோரும் வற்புறுத்துவது மேற்பால் மக்களின் சூழலை விரிவுபடுத்துதற்கேயாம்.

மாசற்றார் கேண்மையை மருவி வாழத்தக்க சூழல் பெருக வேண்டும் என்பதே தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்களமாக அந்நாளில் கருதப்பட்டிருந்தது. பண்பால் உயர்வு கருதாது பிறப்பால் உயர்வு கருதும் நால்வருணக் கோட்பாட்டைப் புகுத்திய மாசுடையார் கேண்மையை மருவி வாழும் சூழலைத் தமிழ் மன்னர் விழைந்த காலத்தில் தமிழ்ப்பண்பாடு நிலை தளர்ந்தது. மேற்பால், கீழ்ப்பால் என்னும் சொற்களுக்கு மேற்சாதி கீழ்ச்சாதி எனத் தவருகப் பொருள் கொண்டு இனவொற்றுமை நீங்கிய நெல்லிக்காய் மூட்டைகளாகத் தமிழினம் சிறுமையுற்றது.

(தொடரும்)

(எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய இருசாரார் கருத்துகளையும் இப்பகுதியில் தொடர்ந்து தரவிருக்கிறோம். தகுதியான கட்டுரைகள் இப்பகுதிக்கு வரவேற்கப் பெறுகின்றன.)

எழுத்துச் சீர் (குறைப்பு.) திருத்தம்.

மா. பூங்குன்றன் அறி.இ; க.மு.

மொழி என்பது ஒரு தெய்வமென்று கூறி வழிபடச் சொல்லுபவர்கள் அல்லர் நாம். ஆனால் நாட்டுப்பற்று, இனப்பற்று எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு மொழிப்பற்றும் இருக்கவேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம். அதைத் திருத்துவதோ காலத்திற்கேற்ப மாற்றுவதோ தேவையான ஒன்றுதான். ஆனால் எந்தத் தேவையின் அடிப்படையில் யார் கை வைக்க வேண்டும் என்றுதான் நாம் பார்க்க வேண்டியுள்ளது. உடற்கூற்றைப் பற்றி முழுவதும் தெரிந்தவன்தான் உடலை அறுவை செய்தல் வேண்டும். அதைப் பற்றித் தெரியாதவன் உடலில் இப்பகுதி தேவையில்லை என்று அவனாக வெட்டியெறிவது எப்படியோ அப்படிப்பட்டதுதான் மொழியறியாரின் எழுத்துச் சீர்திருத்தம்.

ஒரு மொழியில், அந்த மொழியைப் பற்றிய அறிவு, மொழியியல், சொற் பிறப்பியல் அறிவு பெற்ற அறிஞர் குழு ஒன்றுதான் திருத்தம் செய்யமுடியும். அக்குழுவும், அந்த மொழி பேசும் மக்களின் நடைமுறைப் பழக்கத்திற்கேற்ப அவற்றின் படிநிலை வளர்ச்சிகளை நோக்கி, அடுத்தபடிக்குக் கொண்டு போவதைத்தான் குறியாகக் கொண்டு திருத்தம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்த உண்மைச் சீர்திருத்தம்தான் நிலையாக இருக்கமுடியும். அதை விடுத்து வீணே, ஒருவர் நினைத்து விட்டார் என்பதை மட்டும் எண்ணி, அவர் பகுத்தறிவாளர்—இந்தத் தமிழ்நாட்டிற்குத் தேவையானவர் என்பதற்காகவே அவரின் மொழிச் சீர்திருத்தத்தையும் கண்ணைமூடிக்கொண்டு ஏற்றுக் கொள்ளுவது என்பது அவர் கூறிய பகுத்தறிவுக் கொள்கைக்கே புறம்பானது.

இனி இந்த எழுத்துச் சீர்திருத்தம் எந்த வகையில் ஏற்புடையதாகும் என்பதை ஆய்வோம்.

இந்த எழுத்துச் சீர்திருத்தம் மொழியியல் ஆய்வுப்படி அமைந்த ஒரு சீர்திருத்தம் அன்று. பெரியார் ஒருவர் சொல்லி விட்டார் என்பதற்காகவே 'கண்மூடித்தனம்' போன்ற ஒரு திருத்தம். இதை இப்பொழுது

பதவிகளில் இருக்கும் தலையாட்டித் தமிழறிஞப் பொம்மைகளும் பல தலையாட்டியிருக்கின்றன. வழக்கம்போல் நான்கு இறந்த தலைகளையும் இழுத்துப் போட்டுச் சப்பைக் கட்டியிருக்கின்றன இந்த உயிர்ப் பிணங்கள். ‘கலியராசலு’ என்ற ஒரு ‘தெலுங்கு’ அதன் மொழியில் கை எட்டாமல் எல்லாருக்கும் எட்டிய ஏமாறிய தமிழில் ஒரு கையை வைத்துக் கொண்டு ‘உண்மை’ பேசியிருக்கிறது.

மொழியை ஒலி வடிவம், வரி வடிவம் என இரு பகுதியாகப் பிரிக்கலாம். ஒலி வடிவமுள்ள பகுதியை மற்ற மொழிகளுடன் ஒப்பிடலாம். இனமொழி, வேறு மொழி என்று ஒலி வடிவை வைத்துத்தான் பிரிக்கமுடியும். வரி வடிவம் என்பது ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியானது. எனவே இதை ஒப்பிடும் முறையில் செய்யமுடியாது. வண்ணனை மொழியியலைத் **(Discriptive lingustics)** தான் இதில் பயன்படுத்த முடியும். வண்ணனை மொழி நூலின் வழுவியல் என்று பாவாணர் பட்டியல் போட்டுக் காட்டியபோது தங்களுக்கென்ன என்று இருந்தவர்கள் எழுத்துச் சீர்த்திருத்தத்தில் மட்டும் ஆங்கிலத்தில் இருபத்தாறு எழுத்துக்கள்தாம்; பெர்னுர்டுசா அதையும் குறைக்கச் சொன்னுர் என்று வேறு மொழியோடு ஒப்பிடக் கூடாத வரி வடிவத்தை ஆங்கிலத்தோடு ஒப்பிட்டு ஒப்பியன் மொழியியல் (Comparative Lingustics) பேசுவது எவ்வளவு பிழையானது.

தமிழில் 247 எழுத்துகள் என்று கூறி இதில் 11 வடிவங்களை மட்டும் குறைப்பது ஒட்டகத்தின் முன்சுமை யிறக்குவது போன்றது. இவ்வாறு இறக்குவதின்வழி மொழிச்சுமை யொன்றும் குறைந்து விடப் போவதில்லை. நிலையான மொழிச்சிக்கல் தீர்வை இது காணவும் முடியாது.

முதலில் இந்தச் சீர்திருத்தத்தின் நோக்கம் எழுத்துக் குறைப்பு என்பதன்று. ஏதோ தமிழகம் முழுவதும் ஏதாவது ஒன்றிலாவது பெரியாரைப் பின்பற்றியதாக இருக்கட்டுமே என்று இந்தச் சொத்தைத் திருத்தத்தை வலியுறுத்துகின்றனர். இல்லையென்ருல் இவர்களுக்கு மொழியைப்பற்றிச் என்ன அக்கறை வந்து விட்டதாம். அதுவும் தமிழ் மொழியைப்பற்றி. அவ்வாறே உண்மை அக்கறையுடன் மொழிக் குறைப்புச் செய்வதாக இருப்பின் எத்தனை வடமொழியெழுத்துகள் இருக்கின்றனவோ அத்தனையும் வரையறையில்லாமல் ‘விடுதலை’யில் அள்ளித் தெளித்து விரவப்பெறுவது தவிர்க்கப்பட்டு

இருக்கும். அவர்கள் எழுத்து மட்டுமென்ன சொற்களேயே வட மொழியாகவும், ஆங்கிலமாகவும் போடுவதில் கூசா மொழியர்களாக வன்றோ இருக்கிறார்கள். இவரின் ஆங்கில ஏட்டில் ஆங்கில மரபு குறைத்து எழுவாராஞல் படிப்பவர்களுக்குப் புரியாதே என்று தரத்தைக் குறைப்பாராஞல்--அந்தப் பகுத்தறிவைப் போற்றிக் கொள்ளலாம்.

தனித்தமிழ் என்பதை மட்டும் கட்டாயப் படுத்தக்கூடாது. இயல்பாக மக்களிடையில் பரவுவதுதான் மொழி; வற்புறுத்துவதாக இருக்கக்கூடாது என்றெல்லாம் மேற்பூச்சு பூசும் இவர்கள் சட்டம் போட்டு வலியுறுத்துவதை சரியென்று எண்ணுகிறார்கள் போலும்.

அடுத்து, படிநிலே வளர்ச்சி என்பது ஒரு படியை விட்டு அடுத்த படியைத் தாண்டுவதாக இருக்க வேண்டும். ஒருபடி பின் வாங்கிப் பழையபடியில் வைப்பது இயற்கை நிலேகளுக்கே மாருனது. ‘னை’ என்பதன் வடிவ மாற்றந்தான் ‘ஊ’ என்பது. இவ்வாறு இருக்க திரும்பவும் ‘னை’ என்றே மாற்றுவது சீர்திருத்தமாகுமா?

மேலும் சீர்திருத்தத்தின் படி ஒரு புதிய நெடுங்கணக்கு அமைத்தால் அதில் 11 வடிவங்களேக் குறைத்து விடலாம். ஆஞல் ஒவ்வொரு முறை எழுதும்போதும் பல எழுத்துக்களேக் கூட்டுவதாகவே முடியும். ‘ஐயா’ என்பதை ‘அய்யா’ என்றும் ‘ஞ’, ‘ரு’ என்பதை ‘னா’, ‘றா’ என்றல்லவா எழுதுவோம். இது ஒரு பெரிய அளவு கோலேக்கொண்டு விரைவாக அளப்பதை விடுத்து, சிறிய அளவு கோல் ஒன்றை எளிதாகச் செய்து கொண்டு மிகுதியாக அளந்து கொண்டு இருப்பதை ஒக்கும். கொண்டலின் எழுத்துத் திருத்தமோ இதற்கு அப்பன். விரற்கிடை யளவுகோலேக் கொண்டே வீதி முழுவதும் அளப்பது போன்ற மயிரெண்ணும் வேலே. ‘கசடு’ என்பதை ‘க்அச்அட்உ’ என்று எழுதுவதற்குள், இவர்கள் அக்கறை கொண்ட ‘வளரும் தலேமுறை’க் குழந்தைக்குக் கைமட்டுந்தான் உடையும்.

வடிவ மாற்றங்களால் மொழி எவ்வாறு கெடும். என்று சிலர் கூறலாம். இந்திய மொழிகளெல்லாம் தேவநகரி எழுத்தில் எழுதலாம் என்று! ஒரு ‘வடநாடு’ பேசியபோது இந்தத் தலேயாட்டிகள் தலேயை ஏன் ஆட்டவில்லே. அதுதான் இல்லேயென்றுல் ஆங்கிலத்தில் குறைவான எழுத்துகள் தாமே? அவற்றையே தமிழ் மொழிக்குப் பயன்படுத்தி **EZHUDHALAMEA**? இவர்கள் எண்ணும் முழுச்

சிக்கலும் தீர்ந்துவிடும். தொல்காப்பியத்தையும் நன்னூலையும் குப்பையில் போட்டு விடலாமே. அதை விடுத்து என்னவோ மரபுப் படிதான் சீர்திருத்தம் அமைவது போலவும் தொல்காப்பியத்தில் சான்றுகள் காட்டியும் மறுத்தும் நிறுவுவது எதற்கு?

'உண்மை' ஏடு குறிப்பிடுகிறது. பார்ப்பனர்கள் ஏதோ சொல்லி விட்டார்களாம் "தமிழில் அதிகமான எழுத்துகள். தட்டச்சுக்கு இது பொருந்தாது" என்றும் கூறிவிட்டார்களாம். அதனால் இந்தச் சீர்திருத்தத்தைப் பயன்படுத்திப் பார்ப்பனர்களை அமைதிப்படுத்தி விட்டார்களாம். அந்த பார்ப்பனர்க்காகவா இத்தனைத் தமிழர்களையும் திருத்தி எழுதச் சொன்னீர்கள். இதை ஒரு பார்ப்பனர் சொன்னால் செய்யத்தான் செய்வீர்கள். தமிழ் அறிஞர் ஒருவர் உண்மை நிலையை எடுத்து உரைத்தால் குளவியாகச் சேர்ந்து கொட்டுவீர்கள்.

உயிர் எழுத்து என்பது மொழியில் இயக்கம் உடையது. தமிழில் ஒவ்வோர் உயிர் எழுத்தும் 19 வகை யியக்கத்தோடு இயங்குகிறது. எனவே ஓர் உயிர் எழுத்தைக் குறைப்பது 19 இயக்கத்தைக் குறைப் பதற்கு இணை. இஃது ஓர் இயக்கமுள்ள கையை வெட்டுவது போன்றது. ஐ, ஔ என்ற இரு எழுத்துகளை அறவே நீக்கி யிருக்கிறது இந்த எழுத்துச் சீர்திருத்தம்.

ஐ-என்பதை 'அய்' என்று குறிப்பிடுவதன் வழி ஐ என்ற ஒரு எழுத்தே இல்லாமல் போய் விடுகிறது. அதன் பிறகு க் + ஐ, ங் + ஐ, ச் + ஐயாக கை, ஙை, சை எங்கிருந்து வந்தன? தந்தையில்லாத குழந்தையாகப் பிறந்து இருக்கின்றனவல்லவா? கய், ஙய், சய் என்றுவது மாற்றியிருக்க வேண்டும். அரைகுறையாகவன்றோ சீர்திருத்தியிருக்கிறார்கள். அரைகுறைத் திருத்தம் சீர்திருத்தமாகுமா? மேலும் 'ஐ' என்ற இரண்டு மாத்திரையொலியை 'அய்' ஒலிக்கு இணை என்று எவ்வாறு கூறமுடியும்.

அவ்வாறே 'ஔ' விற்கும் வாருங்கள். மொழியாய்வில் 'ஔ' என்பது குவியொலி கொண்டது. குவியுயிர் (**Round Vowel**). இதை ஒலிக்கும்போது இதழ் குவியும் என்பது இதற்குப்பொருள். ஆனால் அதற்கிணையாக மாற்றிய 'அவ்' முதலில் உயிர் எழுத்தில்லை. அஃது குவியொலியை ஏற்படுத்தவும் இல்லை. இவ்வாறு மாறுவதால் வரி வடிவ மாற்றத்தோடு மட்டும் அமையாமல் ஒலி வடிவ மாற்றத் திற்கும் உட்பட்டு மொழியியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

சிலம்பிற் பிழையா?

புலவர். இறைக்குருவனார்.

முத்தமிழ்த் துறைகளை முற்ற வுணர்ந்து வளங்கெழு புலமைசால் இளங்கோவடிகளார் ஆக்கியருளிய, அளப்பரும் பெருமைச் சிலப்பதி காரத்தின்கண் காலமுரண் அமைந்திருப்பதாக அறிஞர்கள் சிலர் எடுத்துக் காட்டுகின்றனர். ஆதலின் அதுபற்றிய ஆராய்ச்சி ஈண்டு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரும்பெறன் மனைவியை ஆயர் சேரியில் விட்டுப் பிரிந்து, அவள்தன் சீறடிச் சிலம்பை மாறிவரச் சென்ற கோவலன் களவுக் குற்றஞ் சாற்றப்பெற்று வெட்டுண்டு கிடந்ததும், அச் செய்தியறிந்த கண்ணகி கொலைக்களஞ் சென்று அவனைக் கண்டதும் ஆகிய நிகழ்ச்சிகள் கதையமைப்பின்படி ஒரு நாளில் நடந்தனவல்ல வென்றும், இருநாள் நிகழ்ச்சியாம் என்றும், கொலைக்களத்தே வெள்வாள் விலங்கூடறுப்ப வீழ்ந்து கிடந்த கொழுநனைக் கண்டு குமுறியழுகின்ற கண்ணகியின் கொடுந்துயர நிலையைக் கூறுகின்ற ஆசிரியர் இளங்கோவடிகளார்,

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

உலக மொழிகளின் மொழியியல் பட்டியல் வரிசையில் தமிழ் பெறும் இடத்தைப் பிற்படுத்துவதாகவும் அமைக்கிறது இச் சீர்திருத்தம்.

அடுத்து, தமிழ்மொழி தமிழ்நாட்டில் மட்டும் பேசுவதன்று. உலகின் பல நாடுகளிலும் ஆட்சி மொழியாகவும், பேசும் மொழி யாகவும் இருக்கிறது. இங்கு மட்டும் வடிவத்திற்காக மொழியையும், மொழிக்காக வடிவத்தையும் மாற்றி மாற்றிச் செய்து கொண்டிருந் தால் நாளடைவில் மலையாளம், கன்னடம் போன்று ஒரு புதிய மொழியாகவே தமிழ் ஆகிவிடும். 'தினமணி'யின் வடமொழிக் கலப்பும் அதற்குமேல் 'விடுதலை'யின் வடமொழியோடு ஆங்கிலத்தை வாரிப்போடும் கலப்பும் ஒரு புதிய மொழியை உண்டாக்காது என்று எப்படி சொல்ல முடியும்? அதற்கு நன்கு துணை செய்யும் வகையில் இச் சீர்திருத்தம் அமையும். இவ்வாறு சட்டம் போட்டு மாற்றுவது அயல்நாட்டுத் தமிழுக்கும் பொருந்துமோ? பொருந்தாதாகையால் தமிழ்நாடு இடம் மாறவும் செய்யலாம்.

எனவே, காலத்தாழ்வு செய்யாமல் சென்ற இதழில் கூறியது போல் மறு ஆய்வுக்குக்குழு ஒன்று அமைத்து நிலையானதை நிறுவு வார்கள் என்று எதிர் நோக்குகிறோம். ○

"வண்டார் இருங்குஞ்சி மாலைதன்வார்குழன்மேற்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதிப் புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்"

என்னும் பகுதியில் காலை மாலை என்பன நிரலே ஒரு நாளின் முற்பகற் பொழுதையும் முன்னிராப் பொழுதையும் குறிப்பனவாகப் பொருள் கொள்ளும்படி அமைத்திருப்பது வழுவாம் என்று கூறு கின்றனர் சிலர். அவர்தம் கூற்றை உடன்பட்டு வழுவமைதி காணு கின்றனர் மற்றுஞ்சிலர். அதனை ஒருவாறு வழிமொழியினும் வழுவெனக் கொள்ளமாட்டாது வெவ்வேறு விளக்கங்கள் தீட்டு கின்றனர் வேறு சிலர்.

தி.பி. 1988-இல் சிலப்பதிகாரத்தைத் தெலுங்கில் மொழி பெயர்த்து வெளியிட்ட பூதலப்பட்டுப் பாவலர் **திரு. சீராமலு** அவர்களே இதனைப் பிழையாகச் சுட்டிக் காட்டியவர் என்பதும், அதனை இழையாகத் தொடுத்துச் சிலம்பிற் சிறுபிழை என்னும் நூலாகக் கட்டியுரைத்தவர் பன்மொழிப் புலவர் **திரு. மு. கு. செகநாதனார்** அவர்கள் என்பதும் அந்நூலால் அறியக் கிடக் கின்றன. எத்தகைய பேரறிஞராயினும் பெரும் பாவலராயினும் "செய்த தவறு தவறே"' என்று உரக்க முழக்குகின்றார் மேற்படி சிறுபிழையாளர்.

சிலம்புச்செல்வரென விளம்பரமுற்றிருக்கும் **திரு. ம. பொ. சிவஞானம்** அவர்கள் மேற்கூறியவாறு பிழையாகவே கொண்டு "இளங்கோவின் மறதி" என்னுங் கட்டுரையில் விரித்தெழுதி நாட்டு கின்றார்; 'ஆனைக்கும் அடிசறுக்கும்' என்று அமைதி காட்டுகின்றார். அக் கட்டுரை தி.பி. 1993 'தமிழ்நாடு' இதழின் பொங்கல் மலரில் வெளிவந்துள்ளது. அன்றியும் அவர்தம் "சிலப்பதிகாரத் திறனாய்வு" என்னும் நூலிலும் இடம் பெற்றுள்ளது.

பண்டாரகர் **திரு. வ. சுப. மாணிக்கம்** அவர்கள் தி.பி. 1989-இல் வெளியிட்டுள்ள **'இரட்டைக் காப்பியங்கள்'** என்னும் நூலின்கண் சிலப்பதிகாரத்திறன் என்னுங் கட்டுரையில் மேற்படி பிழைக்கு ஒருவாறு உடன்பட்டுள்ளார். ஆயினும் அதனைப் பிழை என்று ஒப்புக்கொள்ளாது கவர்ச்சியின் பொருட்டுச் செய்யப்பட்ட காலக்குறுக்கம் என்றும், அவ்வாறு செய்வது நாடக அறம் என்றும்

தீட்டுகின்றார்; பிழைக்கு வேறு பெயர் சூட்டுகின்றார். காலக்குறுக்கம் பற்றியதாகச் சிலப்பதிகாரத்தில் பிறிதொன்றனையும் எடுத்துக் காட்டுகின்றார்.

திரு. ஆப்பிரகாம் அருளப்பர் அவர்கள் இது புதிருமன்று பிழையுமன்று, என்று தொடங்கிக் காலை மாலை என்பன முதல்நாட் காலை, மறுநாள் மாலை எனப் பொருள் கொள்ளற் பாலனவெனச், சிலம்பிற் சிறுபிழையுடையார் ஏரண முறையில் எடுத்துக்காட்டி மறுத்ததொன்றனையே தம் புதுக்கருத்துப் போலப் புகன்று, வேறு சிலவும் கூறி வழுக்கிச் செல்கின்றார். இவர்தம் கட்டுரை செந்தமிழ்ச் செல்வியில் (சிலம்பு: 50; பரல்: 10; பக்கம்: 554) இடம் பெற்றுள்ளது.

நெல்லைத் **திரு. சி. சு. மணி** அவர்கள் தமது சிலப்பதிகாரத் திறன் என்னும் நூலில் முதலாவதான சிலப்பதிகாரத்தில் காலம் என்னுங் கட்டுரையின்கண் இச் சிக்கலை அணுகி ஆய்ந்து முடிவு காண முற்பட்டுள்ளார். இளங்கோவடிகள் கால அமைதி தெளிவுற விளங்கும் வண்ணம் நுணுக்கமாக எழுதிச் செல்கின்றார் என்றுரைத்து, அதற்குப் பற்பல சான்றுகளை அடுக்கிக் கூறுகின்றார். அன்றியும் 'சிலப்பதிகாரக் கால நுணுக்கம்' என்றும் 'சிந்திக்கச் சில வினக்கள்' என்றும் வேறிரு கட்டுரைகளும் விளங்க எழுதி யுள்ளார். ஆயினும் மேலே பிழையாகச் சுட்டியதனை ஏற்றுக்கொண்டு பர். வ. சுப. மாணிக்கம் அவர்கள் கூற்றை ஒருவாறு வழிமொழிந்து 'வண்டார் இருங்குஞ்சி'' என்னும் பாடற்பகுதி வரிகள் 'அவலத்தின் ஆழத்தை, அது வந்த வேகத்தை—விரைவைத் தருகின்றனவே யல்லாமல் கதைப் போக்கை நிரலே சொல்லுவனவல்ல' என்று குறிப்பிடுகின்றார்.

இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால் திருவாளர்கள் சீராமலு முதல் சி. சு. மணி ஈறான யாவரும் சிக்கலை அணுகும் முறையானும், தம் உள்ளக்கிடக்கையை வெளிபபடுத்தும் உரையானும் வேறு பாடுடையரே யாயினும், இளங்கோவடிகள் இருநாள் நிகழ்ச்சிகளை ஒருநாளனவாக அல்லது ஒரு நாளன போலக் குறிப்பிடுகிறார் என்னும் அடிப்படையில் ஒத்த கருத்தினரேயன்றித் தமக்குள் மாறு பாடு உடையரல்லர் என்பது நன்கு தெளியப்படும்.

சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த முன்னை உரையாசிரியர் களான அருஞ்சொல்லுரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகியோரும், பின்னை உரைகாரர்களான நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமி,

பெருமழைப்புலவர் திரு. பொ. வே. சோமசுந்தரனுர் முதலியோரும், சிலப்பதிகாரம் பற்றிப் பல்வேறு வடிவில் நூல்கள் வரைந்த திருவாளர்கள் ஔவை. சு. துரைச்சாமி, பர். மு. வரதராசனுர், பர். ந. சஞ்சீவி, பாவோகி சுத்தானந்த பாரதியார், பர். இரா. பி. சேது முதலியவர்களான பலரும், மற்றும் பேராசிரியர் திரு. துரையரங்கனுர்* அவர்களும் மேற்கூறிய சிக்கலுக்கு அடிப்படையான நிகழ்ச்சிகள் ஒருநாளில் நடந்தனவாகவே கொண்டு இயல்பாக எழுதிச் சென்றுள்ளனர். ஆனல் இச்சிக்கலைத் தாமாக எழுப்பிக் கொண்டோ அஃது எழுந்த பின்னரோ தருக்க முறைப்படி மறுத்தெழுதித் தம் கருத்தை நிறுவிஞரல்லர்.

மதுரைப் பல்கலைக் கழக மேனுள் துணைவேந்தரும், பன்மொழிப் புலவருமான பண்டாரகர் **திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்** அவர்கள் மேற்சுட்டிய சிலம்பிற் சிறுபிழை என்னும் நூலுக்குத் தாமெழுதியுள்ள அணிந்துரையில் "வண்டார் இருங்குஞ்சி" என்னும் பாடலை ஆக்கியோன் கூற்ருகக் கொள்ளாது நாடக மாந்தர் கூற்ருகக் கொள்ள வேண்டும் என்றும், அப்பாடல் ஒரு புதிரென்றும், இலக்கியத்தை வரலாற்று நூலோ நாட்குறிப்பேடோ எனக்கொண்டு விளக்கும்போது இடர்ப்பாடுகள் எழுகின்றன என்றும், புலவர்களும் காலமும் பற்றி மேலை நாட்டினரும் பரக்க ஆராய்ந்து வருகின்றனர் என்றும் பிறவாறும் கூறி இலக்கிய நயம் உணராதார் பேச்சாகவே இந்தக் கணக்குகள் முடிகின்றன என்று திருவாய் மலர்ந்துள்ளார்கள். ஆ! என்னே அவர்தம் இலக்கிய நயமுணரும் நுண்ணுணர்வு இருந்தவாறு! இது கிடக்க!

இனி, வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த நிறைபுலவேந்தர் **மறைமலையடிகளார்** வடமொழியில் சிறந்து விளங்கும் காளிதாசரின் சாகுந்தல நாடகத்தைப் பகைவரும் பாராட்டும் வண்ணம் தெள்ளிய தமிழ் நடையில் மொழி பெயர்த்து வெளியிட்டதுடன், அதற்கு மிக் நுண்ணிய ஆராய்ச்சி நூல் ஒன்றையும் ஆக்கி வழங்கியுள்ளார்கள். காளிதாசரின் புலமை நலங்களையும், சாகுந்தலத்தின் மாட்சியையும் பலபடப் புனைந்துரைக்கும் அடிகளார், அதன்கண் தாம் காணும் குறைபாடுகள் சிலவற்றையும் சுட்டிக்காட்டு

*பேரா. துரையரங்கனுர் அவர்கள் இச் சிக்கல் தொடர்பாகப் பேரா. அ. சீனிவாசராகவன் மணிவிழா மலரில் வரைந்திருப்பதாகத் தெரிகின்ற கட்டுரை எமக்குக் கிட்டவில்லை.

கின்றார்கள்; விளக்கவுரைப் பகுதியில் (நான்காம் வகுப்பு) காலமுரண் ஒன்று அவர்களால் எடுத்துக் காட்டப் படுகின்றது:

> "அத்தினபுரம் என்பது இப்போதுள்ள தில்லி நகருக்கு வடகிழக்கே ஐம்பத்தாறு கல்லில் உள்ளது: பரதவேந்தன் வழிவந்தோனான அத்தினன் என்பவனால் உண்டாக்கப்பட்டது. கங்கையாற்றில் வந்து கலக்கும் ஒரு கிளையாற்றங்கரை மருங்கே உள்ளது. **துசியந்தவேந்தன் மகனான பரதன் காலத்திற்குப் பின்னர் உண்டாகிய இந்நகரை துசியந்தன் காலத்தில் அவற்குரிய தலைநகராகக்** காளிதாசர் கூறியது காலமுரண் ஆகும்."

அடிகளார் அச்சிட்டு வெளிப்படுத்தாது கையெழுத்துப் படியாக வைத்திருந்த **'அம்பிகாபதி அமராவதி'** என்னும் நாடகம் அடிகளார்தம் மறைவிற்குப் பின்னர் அவர்களுடைய அணுக்கத் தொண்டர் திரு. **கனகராயர்** அவர்களால் பதிப்பித்து வெளியிடப் பட்டுள்ளது. அந் நாடகத்து இரண்டாம் நிகழ்ச்சியின் முதற் காட்சியில் கம்பரின் மகனான அம்பிகாபதி அவைக்களத்தே ஆற்றும் உரையின் ஒரு பகுதி வருமாறு:

> "இனிக் கடவுளும் உயிரும் உண்டோ இல்லையோ என்னும் ஆராய்ச்சியில் நாம் இப்போது நுழைய வேண்டுவதில்லை. நம் பெருமான் மெய்கண்ட தேவர் தாம் அருளிச் செய்திருக்கும் சிவஞான போதத்தில் கடவுள் உயிர் உலகம் அல்லது பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களையும் பற்றி ஆராய்ந்துரைக்க வேண்டுவனவெல்லாம் முற்ற ஆராய்ந்து அவற்றின் உண்மையை முடித்துக் கூறியிருக்கின்றார்-"

கம்பர்—அம்பிகாபதி காலம் தி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டென்பதும், மெய்கண்டார் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டென்பதும், வரலாற்றாசிரியர் வரையறுத்த கொள்கை, கம்பர் காலத்தை முற்படுத்துரைப்பார் சிலர் உளரேனும், பிற்படுத்துரைப்பார் அரியர். எவ்வாறாயினும் கம்பர் காலத்திற்குப் பிற்பட்டவர் மெய்கண்டார் என்பது ஒருதலை. இவ்வாறிருப்ப, மெய்கண்டாரையும் அவர் தம் மெய்ந்நூலையும் குறிப்பிட்டு மேற்கோள் காட்டி அம்பிகாபதி உரையாற்றுவதாக அடிகளார் அமைத்திருப்பது, அவர்கள் சாகுந்தலத்தில் எடுத்துக் காட்டியது போல்வதொரு காலமுரணேயாம். அடிகளார் தாமே அம்பிகாபதி அமராவதியை

அச்சிட்டு வெளிப்படுத்தியிருப்பின் இப் பிழை களையப்பட்டிருக்கும் என்று உறுதியாக நம்பலாம். ஆயினும் அடிகளார் பெயரில் வெளிவந் துலாவும் ஒரு நூலில் இப் பிழை இடம் பெற்றிருப்பது வருந்துதற்குரியதேயாம்.

உலக வியற்கை மக்களியற்கைகளை உற்று நோக்கின் ஈண்டு எத்துணை ஒள்ளியராயினும் அவரெல்லாம் எவ்வாற்ருனும் மெய்யுணர்வின் மேம்பட்டு அறியாமை அறவொழிந்த திறவோரெனத் தெளிந்துரைத்தற் குரியாரல்லர். குற்றங் குறைகள் முற்றுந் தொலைந்த பெற்றியார் என்று துணியத்தக்காரும் உளர்கொல்! அங்ஙனம் அளந்துரைக்கும் ஆற்றலுடையார்தாம் யாவர்? உயிர்களெல்லாம் குறைபாடுடையன என்பது எத்துணை உண்மை! இது பற்றி யன்றே,

"அரியகற் ருசற்ருர் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு"

என்னும் பெருநாவலரின் திருவாய்மொழியும், எழுந்தது! நம்மனோர் அறிவின் திறத்தை ஒருவாறு படிநிலைப் படுத்த முடியுமே யன்றி ஒருதலையாக முடிநிலைப் படுத்த முடியாது.

பல்லாற்ருனும் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்ரேர்பால் ஒரோவழி நிகழுங் களங்கம், காரிருள் கிழித்துக் கதிரொளி பரப்பும் மதிக்கண் திகழும் மறிப்போல்வதேயாம். அதனல் அவர்தம் பேரொளி எவ்வாற்ருனும் இழுக்குப்படுவதன்று; எவரானும் இழிக்கப்படுவது மன்று. ஆசிரியர் இளங்கோவடிகள் வகுத்த சிலப்பதிகாரம் ஒரு சாரார் சுட்டிக்காட்டுமாறு போலக் குற்றமுடையதே யாயினும் அது பற்றி அடிகட்கோ சிலம்புக்கோ ஒரு சிறிதும் இழிவு நேரமாட்டாது. இது நிற்க!

'சிலம்பிற் சிறுபிழை' செகநாதனர் வையாபுரியின் வழிநின்று அயன்மொழி நாகரிகக் கலப்பின் பெருமையும், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் சிறுமையும் பற்றியும் இன்னோரன்ன பிறவற்றைப் பற்றியும் வாய்நீட்டுகின்ருர். மற்றும் இப் 'பிழை' முடிபைத் தம் புதுக் கண்டுபிடிப்பாகக் கூறும், ம. பொ. சிவ ஞானத்தின் கரவடச் செயலையும் வெளிப்படுத்துகின்ருர். அவை யெல்லாம் ஈண்டைய ஆராய்ச்சிக்குப் பெரிதுந் தொடர்புடையன வல்லாமையின் அவற்றைப் புறந்தள்ளி மேற்செல்வாம்.

முதற்கண் பர். வ. சுப. மாணிக்கம் அவர்கள் தம் கருத்தை யொட்டிச் சிலப்பதிகாரத்தினின்றும் எடுத்துக்காட்டும் பிறிதொரு செய்தியை முறையுற ஆய்ந்து தீர்வு செய்து கொள்வது நன்று. மாணிக்கம் அவர்களின் கூற்று வருமாறு:

“கோவலன் செவ்வாய்க்கிழமை காலை கண்ணகியைப் பிரிந்து சென்றான் என்று வைத்துக் கொண்டால், பகற்பொழுதைக்குள் கொலைப்படுகின்றான். அறிவன் (புதன்)கிழமை மாலை கண்ணகி வெட்டுண்ட கோவலனைக் காண்கிறாள். அன்றிரவே தேவிக்குத் தீக்கனா ஏற்படுகின்றது. வியாழக்கிழமை மாலை பாண்டியன் முன் கண்ணகி தோன்றி வழக்குரைத்து வெல்கின்றாள். பாண்டியன் தேவியொடு அப்போதே உயிர்விடுகின்றான். இக்காலத் தெளி வோடு பின்வரும் அதனைக் காண்போம்: —

“கோவேந்தன் தேவி கொடுவினை யாட்டியேன்
யாவும் தெரியா இயல்பினேன் ஆயினும்
முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண்”

இது கோப்பெருந்தேவிமுன் கண்ணகி கூற்று. ஒருநாள் முற் பகலில் பிறனுக்குக் கேடு செய்தவன் அதே நாள் பிற்பகலில் தான் கேட்டைவான் என்று தன் கணவனை அழித்த பாண்டியன் உடனே அழிந்ததுபற்றி மகிழ்கின்றாள் பத்தினி. இருநாள்ஈங்குக் குறைவு படுதலைக் காண்கிறோம். ஊழ்வினை மிகவிரைந்து வந்து வினை செய்தானைத் தாக்கும் என்ற கருத்தை வலியுறுத்தும் பொருட்டு நாடகம் இருநாளைக் காவு (பலி) கொண்டது.”

கண்ணகியைக் கோவலன் பிரிந்து சென்றது செவ்வாய்க் கிழமையுமன்று; கண்ணகி பாண்டியன்முன் தோன்றி வழக் குரைத்தது வியாழக்கிழமையுமன்று. உறுதியாகக் கூறாமல், ‘வைத்துக் கொண்டால்’ என்று அவர் வழுக்கிச் செல்கின்றமை யானும், இச் செய்தி பின்னர் விரிவாக ஆராயப்பட விருக்கின்றமை யானும் ஈண்டு அதனை விடுத்து, மேற்காணும் பகுதியில் அவர் குறிப்பிடும் காலக்காவு பற்றிக் காண்போம்.

(தொடரும்)

ஓ! பொதுவுடைமை இயக்கத் தோழர்களே!

—தென்மொழி நலங்கிள்ளி
(பரிமளாமணாளன்)

நமது குமுகாய அமைப்பு முறையினையும் அதைச் சுரண்டும் வகுப்பு எப்படியெல்லாம் தமக்குப் பயனுள்ள வழிகளில் பின்னி வைத்துள்ளது என்பதனையும் இதுவரை சரிவரப் புரிந்து கொள்ள முடியாது தவிக்கின்ற நீங்கள், மொழி-மொழித்தூய்மை பற்றியும், தேசீய இனங்களின் விடுதலைத் தேவை பற்றியும்கூட சரியான முடிவு எடுக்காமல் சரியான முடிவு எடுத்துள்ளவர்களைக் கொச்சைப் படுத்தி வருவது வேடிக்கையாக உள்ளது. பொதுவுடைமை மெய்ம் மங்களைத் திரட்டி உலகுக்களித்த பெருந்தகை **காரல் மார்க்சும்,** அம்மெய்ம்மங்களை நடைமுறைப் படுத்திய - உழைப்பாளிகளின் அரசை நிறுவிய—தோழர் **இலெனின்** அவர்களும் இவைபற்றி மிகச்சரியான கருத்துகளை வைத்திருந்தும், நீங்கள் வரட்டுத்தனமான முதலாளியப் போக்குகளையே இதில் கையாண்டு வந்திருக்கிறீர்கள்-வருகிறீர்கள்.

இப்போது ஆங்காங்கே சில மாற்றங்கள் தெரிகின்றன. அண்மைக் காலமாகத் தமிழக அரசியல் மேடைகளிலும், கருத் தரங்குகளிலும் இந்தித்திணிப்பை எதிர்த்தும், இந்தி ஆட்சி மொழி யாவதை எதிர்த்தும், பல புதுமுகங்கள் முழங்கி வருவதையும், அதில் நீங்கள் கணிசமான தொகையினராக இருப்பதும் காணக் கூடியனவாக இருக்கின்றன. மொழி, இனம் பற்றித் திராவிட இயக்கங்களைச் சார்ந்தவர்கள் பேசிவந்ததையே மொழிவெறி இன வெறி என்று வரட்டுக்கூச்சல் போட்டு வந்த உங்களைக் காலமே கட்டாயபடுத்திச் சரியான பாதைக்குத் தள்ளிக் கொண்டு வந்திருக் கிறது எனல் வேண்டும்.

உங்களில் சிலர் இன்னும் சற்று முன்வந்து **தென்மொழி** முன்வைத்திருக்கின்ற கொள்கைகளில் ஒன்றான தனித்தமிழ்பற்றி-மொழித்தூய்மை பற்றி பேசமுன்வந்திருப்பது - வந்துகொண் டிருப்பது காலத்தின் நெருக்கடியினாலும் தனித்தமிழில் வெளி வந்துள்ள சில பொதுவுடைமை நூல்களுக்கு மக்களிடையில் நல்ல வரவேற்பிருப்பதினாலேயுமே ஆகும்.

இதற்கு முன் உங்களது இந்தி எதிர்ப்பு என்பது வெறும் தாள் அறிக்கைகளாக மட்டுமே இருந்தது. **தென்மொழி** எழுதிவரு

கின்ற-சொல்கின்ற தனித்தமிழ்-மொழித்தூய்மை என்பது ஏதோ புதுமையான கொள்கையோ-புரியாத செயலோ அல்ல. இஃது எங்களது தனி உடைமையுமன்று. சொல்லப் போனால் பொதுவுடைமை மெய்ம்மங்களை முன்வைத்த பெருந்தகை **காரல் மார்க்சும்** அதை முதன் முதலில் நடைமுறைப்படுத்திய தோழர் **இலெனினும்** கூட சொன்ன-அமைத்த-கையாண்டு வந்த கொள்கைதான். மொழித்துறையில் காரல் மார்க்சு எப்படித் தூய்மை கடைபிடிப்பவராக இருந்தார் என்பதைத் தென்மொழி முண்பே (சுவடி 14 ஓலை 12) எடுத்துக் காட்டியிருக்கிறது. மொழித் துறையில் தோழர் இலெனின் எவ்வளவு தூய்மை காப்பாளராக இருந்தார், உருசிய மொழியில் வேற்றுமொழிச் சொற்கள் கலப்பதை, அதையும் எழுத்தாளர்கள் செய்வதையும் எவ்வளவு கடுமையாக எதிர்த்துள்ளார் என்பதையும் இலெனின் நூல் திரட்டு 5 ஆம் பகுதியை (மொழி பற்றி ஆற்றிய சொற்பொழிவுகளில்) படித்திருந்திருப்பீர்களேயானல் உங்களுக்குத் தெரித்திருக்கலாம். **'உருசிய மொழியைக் கெடுப்பதை எதிர்த்து ஒரு பெரும் போரையே நடத்த வேண்டும்'** என்று அவர் சொல்லியுள்ளது கண்களில் பட்டிருக்கலாம்.

ஆனல் இதற்கு நேர்மாருக உள்ளது உங்களது முற்போக்கு எழுத்தாளர்கள், வட்டார வழக்குகளில் எழுதுவதை-அஃதாவது கலப்பு நடையில் மொழியைக் கொச்சைப் படுத்தி எழுதுவதையே 'யதார்த்தமான' போக்கு என்றும், இதுவே மொழியை வளர்க்கும் முறை என்றும்-மொழி வளரும் முறை என்றும் சொல்லி, எழுதிக் குவித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். சற்று பொறுமையாக எண்ணிப் பார்த்தீர்களானல், உங்களது இம்முற்போக்குத்தனம், பிற்போக்குத் தனங்களுக்கே சாதி-சுரண்டல் அமைப்புகளுக்கே வேலி போட்டுக் கொண்டிருப்பதை அறியலாம்.

சுரண்டலை அடிப்படையாகக் கொண்டுள்ள இங்குள்ள சாதி அமைப்புகளில் ஒவ்வொரு சாதிக்காரரும் மொழியை ஒவ்வொரு வகையில் பேசுவது பெரும்பான்மை வழக்காக இருக்கிறது. சுரண்டுபவர் பெரும்பாலும் உயர்சாதியைச் சார்ந்தவர்களாகவும். சுரண்டப்படுபவர் பெரும்பாலும் கீழ்ச்சாதியைச் சார்ந்தவர்களாகவும் இருக்கிருர்கள். இதற்கேற்ப இவர்கள் மொழி வழக்குகளும் மாறுபட்டுள்ளது. எனவே இவ்வழக்குகளில் இலக்கியங்கள் படைப்பது, இவ்வமைப்புகளை இறுகச் செய்யவே-காப்பாற்றவே துணைபுரியும்

சாதி அமைப்புகளை எதிர்த்து அவற்றை அழித்தொழிக்க வேண்டிய நீங்கள், அதற்குத் துணைபோவது-காப்பாற்றிக் கொண்டிருப்பது பொதுவுடைமை மெய்ம்மங்களுக்கு உட்பட்டுத்தானா? மார்க்சும், இலெனினும் மொழித் தூய்மை பற்றி சொன்னவை பிழையா?

அடுத்து, தேசிய இனச்சிக்கல். இதில் நீங்கள் உங்கள் முந்தைய நிலையை அஃதாவது **1942**-இல் வைத்திருந்த நிலையைக் கைகழுவாது வைத்திருப்பீர்களேயானால் இன்று இந்திய ஒன்றியத்தினுள்-துணைக்கண்டத்தினுள் பல சமநிலை (சோசலிச)க் குடியரசுகள்-பொதுவுடைமைக் குடியரசுகள் உருவாகியிருந்திருக்கும்.

ஆனால் உங்களது நிலையற்ற-திருத்தல் வழக்குப் போக்குகளினாலும், உங்களது இயக்கத்தின் தலைமை, நடுவக்குழுக்களில் பார்ப்பனீயம் கணிசமாக வல்லாண்மை பெற்று வந்ததினாலும் இயல்பாகவே மறைமுகமாக முதலாளியத்திற்கே துணை போனீர்கள்; போய்க் கொண்டிருக்கிறீர்கள். அதனால் மக்கள் நடுவில் உங்கள் சாய்கால் (செல்வாக்கு) சரிந்து கொண்டே இருக்கிறது.

இந்தியத் தேசியம் பற்றியும் அதன் தேவை பற்றியும் அது காக்கப் பட வேண்டிய இன்றியமையாமை பற்றியும் முதலாளிய இயக்கங்களும் அவற்றின் சார்பானவர்களும் பேசுவது வியப்பானதன்று. ஏனெனில் அவர்களின் சுரண்டல் தொழிலானது துணைக் கண்டம் முழுக்க எவ்வகைத் தங்கு தடையுமின்றி நடைபெற வேண்டும் பெருக வேண்டும் என்ற குறிக்கோளில் செயலாற்றுபவர்கள்அவர்கள். ஆனால் நீங்களும் 'இந்தியத் தேசியம்' பற்றிப் பேசுவதும், அதைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்பதும் பெரும் வியப்பாக இருக்கிறது.

மார்க்சீய இலெனினியத்தின்படி **தேசியம்** என்று கூறும் பொழுது, **வரலாற்று வழியான வாழ்வைக் கொண்டுள்ளவர்களும், பொதுவான மொழி, பொதுவான நிலம், பொதுவான பொருளியல் வாழ்வு ஆகியவற்றுக்கு உரியவர்களும், பொதுக் கலைமுறைகள், பண்பாடு** ஆகியவற்றால் வெளிப்பாடு பெறும், உணர்வு அடிப்படையில் ஒன்றுபட்ட மனநிலையுடையவர்களுமாகிய ஒரு தொகுதி மக்களையே குறிக்கும்.

நீங்கள், காப்பாற்றப்பட வேண்டும் என்று கூப்பாடு போட்டுக் கொண்டு அலைகின்றீர்களே, அந்த 'இந்தியத் தேசியம்' மார்க்சிய இலெனினியம் கூறும் இந்தத் தேசிய வரைவிலக்கணத்திற்குப்

பொருந்துகிறதா? இந்தியத்தேசியம் என்பது போலியானது; என்றுமே இல்லாதது; இருக்க முடியாதது.

இந்தியா என்பது, வலுக்கட்டாயமாகவும், ஆசைச் சொற்களைக் கூறி ஏமாற்றியும், பல தேசியங்களை உள்ளடக்கியதுமான ஒரு முழு முதலாளிய அமைப்பு. இவ்வமைப்பினுள் அடைப்பட்டுள்ள ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய 'தன் அமைப்பு உரிமை' உண்டு. நீங்கள் உண்மையிலேயே மார்க்சீய இலெனினியத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்ருல் இதை ஒப்புக் கொண்டாக வேண்டும். சமநெறிக் குடியரசுகள்-பொதுவுடைமைக் குடியரசுகள் இங்குத் தோன்ற வேண்டுமென்ருல், இத் துணைக் கண்டத்திலுள்ள தேசிய இனங்களின் 'தன் அமைப்பு உரிமையை' அறிவிப்புப் படுத்தி அதன் பின்னணியில். நீங்கள் உங்கள் வேலைத் திட்டங்களை-ஒவ்வொரு தேசிய இனத்திற்குமுள்ள குறைகளை-சிக்கல்களை நடுப்படுத்தி வைக்க வேண்டும்; போராடவேண்டும். அப்போதுதாம் மக்கள் உங்களைச் சரியாக புரிந்து கொள்ளவும், சமநெறி எண்ணங்கள் மலரவும், அதன் வழி இயக்கம் நன்கு வேறூன்றி வளரவும் முடியும். இதை விடுத்து இல்லாத ஒரு தேசியத்திற்காக நீங்கள் வழக்காடிக் கொண்டிருந்தால் உங்களுக்கு இன்னும் சரிவே ஏற்படும். இதனுலேயுமே நீங்கள் இதுவரை வைத்த வேலைத் திட்டங்கள் அதன் அடிப்படையில் அமைந்த உங்கள் போராட்டங்கள் மார்க்சீய இலெனினியத்திற்கே பெரும் இழுக்கைத் தேடித்தந்து படுதோல்விகளை அடைந்துள்ளன.

தென்மொழியின் தமிழக விடுதலைக் கொள்கை என்பது எந்த வகையிலும் மார்க்சீய-இலெனினியத்திற்கு முரணானதன்று. மாருக அதனை எதிர்ப்பதே மார்க்சீய-இலெனினியத்திற்கு முரணானது. தமிழக விடுதலை என்பது மார்க்சீய-இலெனினியம் முன் வைத்துள்ள 'தன் அமைப்பு உரிமைக்கு' உட்பட்டதே ஆகும். அதனுல் நீங்கள் பிரிவினை வழக்கு என்று சொல்லிப் பதறவோ-கதறவோ வேண்டியதில்லை. 'தன் அமைப்பு உரிமை' பற்றி மார்க்சீய-இலெனினியம் சொல்வது உங்களுக்குத் தெரியாதா என்ன?

'தேசிய இனங்களுக்குப் பிரிந்து போகவும் உரிமை உண்டு. தனி அரசுகளாக இயங்கவும் உரிமை உண்டு, என்ற முழக்கத்தை மக்கள் நடுவில் பரப்ப வேண்டும். இதை எதிர்ப்பவர்களை எதிர்க்க வேண்டும்.'

தமிழ்மொழியில் கலப்பு

கூடவே கூடாது!

என்ன!? ஏன்? எதற்காக? எப்படி? முடிவு யாது?

மொழி என்பது என்ன?: மொழி என்பது என்ன? அதற்குத் தமிழில் உள்ள பொருள் யாது? மொழி என்ற சொல்லுக்கு நேரானது, செம்மையானது என்று பொருள். இப்பொருள் இன்னும் மலையாளத்தில் வழக்கிலுள்ளது. மலையாளத்தில் 'இது சரி' 'இது தவறு' என்பதை **'இதுமொழி' 'இது மொழிக்கேடு'** என்பர். இதன்படி பழங்காலத்தில் தமிழ்மொழி என்றால் தமிழின் செம்மை அல்லது செந்தமிழ் என்று பொருள். தூய்மையாகவும் திருத்தமாகவும் பேசுவதே மொழியாகும் என்று வரையறுத்த நம் முன்னோரின் நுண்ணறிவை எண்ணிப் பாருங்கள்!

மொழிக்கலப்பு ஏன் கூடாது?: 'பொருளை உணர்த்த எந்தச் சொல்லைப் பயன்படுத்தினால் என்ன? நமக்குப் பொருள் புலப்பாடு தானே தேவை' என்கின்றனர். இக்கூற்று பொருந்தாது. ஏனென்றால், அரசன் என்றாலும் **'King'** என்றாலும் உணர்த்தப்படும் பொருள் ஒன்றாக இருக்கலாம். ஆனால் ஒரு மொழி தன் சொல் வளத்தில் ஒரு சொல்லை இழந்தால், அதன் உடலுறுப்பில் ஒன்று

(முன்பக்கத் தொடர்ச்சி)

'தேசியங்கள் பிரிந்து செல்லும் உரிமையாகிய தன் அமைப்பு உரிமையை அறிவிப்புப் படுத்தாது சமன்மை (சோசலிசம்) பேசும் சமநிலையாளர்கள் வல்லாண்மை அரசுகளின்—முதலாளியத்தின் எடுபிடிகளே.'

'தன் அமைப்பு உரிமைகளுக் கெதிரான நடவடிக்கைகளுக்கு பொதுவுடைமைக்கட்சி சிறிதும் பொறுப்பேற்க அழுத்தந்திருத்தமாக மறுக்கிறது'. இவையெல்லாம் உங்களுக்குத் தெரியாவா?

இருந்தாலும், இதையெல்லாம் படித்துவிட்டும் எங்களைப்பார்த்து மொழிவெறியர், இனவெறியர், பிரிவினைக்காரர்கள் என்ற பல்லவியைத்தான் பாடுவீர்கள். அதற்காக நாங்கள் வருத்தப் படவோ எங்கள் பாதையை மாற்றிக் கொள்ளவோ போவதில்லை. காலம் உங்களை எங்கள் பாதையில் தள்ளப்போகும் காட்சி வெகு தொலைவில் இல்லை என்ற உறுதியான நம்பிக்கை எங்களுக்குண்டு. வெல்க தமிழம்! o

வேண்டுமென்றே நீக்கப்பட்டுச் செயற்கையுறுப்புப் பொருத்தப் பட்டது போலாகும்.

அரசன் என்னும் சொல்லிலிருந்து **அரசாட்சி, அரசியல், அரசாணை, அரசகுடும்பம்** எனப் பல சொற்கள் தோன்றும். ஆயின் 'கிங்' புகுந்து கிங்காட்சி, கிங்கியல், கிங்காணை, கிங்குடும்பம் எனக் கூட்டுச் சொற்கள் தோன்ற முடியாது. அப்போது இக்கூட்டுச் சொல் ஒவ்வொன்றுக்கும் ஒரு பிறமொழிச் சொல்லைத் தேட வேண்டி வரும்.

எனவே, **ஒரு மொழிக்கு உரிய சொல், பிறமொழிக் கலப்பால் வழக்கு வீழுமாயின், அச் சொல்லிலிருந்து தோன்றும் நூற்றுக்கணக்கான பக்க வேர்ச் சொற்களும் ஆயிரக்கணக்கான சல்லிவேர்ச் சொற்களும் வழக்கிழந்து விடும்.** ஒருவிரல் அழுகுவதைக் கவனியாவிடின் கையையே எடுத்து விட்டுப் பொய்க்கை, போலிக்கை வைக்க வேண்டிவரும் என்னும் உண்மையை எண்ணிப்பாருங்கள்!

மொழிக்கலப்பால் உலகில் மறைந்துபோன மொழிகள் உண்டு. ஐரோப்பாவில் உருசிய மொழியும் ஆர்மீனிய மொழியும் கலந்தபோது ஆர்மீனிய மொழி அழிந்தது. இங்கிலாந்தில் கெல்த் மொழி ஆங்கிலத்தின் கலப்பால் இல்லாது போயிற்று. அளவிறந்த பிற மொழிக் கலப்பால் ஆங்கிலமும், மலையாளமும் தம் மொழிகளில் கலைச் சொற்களைப் படைத்துக் கொள்ளும் ஆற்றலை அறவே இழந்து விட்டன.

சமற்கிருதச் சொற்களை மிகுதியாகக் கலந்து எழுதும் 'மணிப் பவள' நடையில் எழுதப்பட்ட 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்த' ஈட்டுரை மீண்டும் மீண்டும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள ஒன்றே தமிழ் பிறமொழிக் கலப்பால் வளராது, அது தமிழர்க்குப் புரியாது, கலப்புத்தமிழ் தமிழ் அன்று என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

எதற்காகக் கலப்பு கூடாது?: இந்தியா முழுமையும் ஒரு காலத்தில் தமிழ் ஒன்றே பேசி வாழ்ந்த தமிழினம், யானை தேய்ந்து எறும்பாகி விட்டதுபோல் மிகவும் சிறுத்துவிட்டது. தமிழை முறைப்படி தூய தமிழாய் வளர்க்காததனால் இந்தியாவில் தமிழர் சிறுபான்மையராகி விட்டனர்.

3500 ஆண்டுகளுக்குமுன் சிந்துவெளி மக்கள் பேசிய **தமிழ் பைசாச பிராகிருத**மாய்ப் பிரிந்துவிட்டது.

3000 ஆண்டுகளுக்குமுன் வடநாடு முழுமையும் பேசப்பட்ட தமிழ் **பிராகிருத, பாலி** மொழிகளாய்த் திரிந்துவிட்டன.

1500 ஆண்டுகளுக்குமுன் தமிழில் இருந்து **கன்னடம், தெலுங்கு, மராத்தி, குச்சரம்** (குசராத்தி) ஆகியவை தனிமொழிகளாகப் பிரிந்த பின்பு தமிழோடு சேர்த்து ஐந்திரவிடம் (பஞ்ச திராவிட) என அழைக்கப்பட்டன.

800 ஆண்டுகளுக்குமுன் மலையாளம் தமிழினின்றும் பிரிந்து தனி மொழியாகி விட்டது.

தமிழைச் செந்தமிழாய், கலப்பில்லாத் தூய தமிழாய்ப் பேணு திருப்பின் தமிழன் சிறுத்துக் கொண்டே போய், இறுதியில் கலப்பின் கொடுமையால் தமிழன் காணுமற் போய் விடுவான் என்னும் உண்மையைக் கருத்தில் இருத்துங்கள்.

கலப்பு கூடாது என்பது எப்படிப் பொருந்தும்? தமிழைப் பயிலாத தமிழன் தானே வலையில் விழும் மானைப்போல் பிறமொழிக்கு அடிமையாகி விடுகிறுன். அவனை அம்மொழியாரும் தம்மினத்தவனுக ஏற்றுக் கொள்வதில்லை. தமிழன் இரண்டும் கெட்டான் நிலையடைந்து நாடும், இனமும், மொழியும் அற்ற ஒரு புதிய காட்டினத்தவனுகி விடுகிறுன்.

கலப்புத் தமிழ்க் காவலர்கள், கொடுந்தமிழ்க் கோமான்கள், தாம் கல்லாத மக்களின் வாழ்வை அவர்கள் பேசும் மொழியிலேயே படம் பிடித்துக் காட்டுவதாகக் கூறுகின்றனர். அவர் கூற்று மெய்யாயின் அன்னுர் படைப்புகளைக் கல்லாத மக்களா படிக்கிறுர்கள்? கற்றவர்க்குக் கல்லாதவரின் கொடுந்தமிழ் நடை எதற்காக? நன்கு நடக்கத் தெரிந்த பின்பும் நடைவண்டி வேண்டுமோ?

ஒரு மொழியைக் கற்பதன் நோக்கம் திருத்தமாகப் பேசவும் எழுதவுமே யாகும். 'கற்கக் கசடறக் கற்பவை' என வள்ளுவர் கூறுவது எதற்காக? கொச்சைத் தமிழைப் பேசவும் எழுதவுமா என்பதை எண்ணிப்பாருங்கள்.

நாடு கெழு ஒன்றுேட்டம் என்னும் 'தேசிய நீரோட்டத்தில்' தமிழரும் பங்குபெற வேண்டுமானுல் தமிழில் வடசொல் மிகவேண்டும் எனக் கதைப்பாரும் உளர். இந்திய மொழிகளில் ஆங்கிலச் சொற்கள் கலந்திருப்பதால் இந்தியர் ஆங்கில இனத்தவராக ஆகிவிடுவாரா? எண்ணுங்கள்!

ஆங்கிலத்தில் ஒரு புதுச்சொல் படைக்கப்பட்டால், அதை விரும்பி யேற்றுப் பலரிடமும் பெருமையாக எடுத்துச் சொல்லிப்

பாராட்டி மகிழ்கிறர். தமிழில் ஒரு புதுச்சொல் படைக்கப்பட்டால் 'இது யாருக்குப் புரியும்' என ஏளனம் புரிகிறர்.

இத்தகைய இரட்டை நாக்கும், இரண்டகச் செயலும் உடையவரே தனித்தமிழைத் தகர்க்க முனைந்துள்ளார் என்னும் உண்மையை உணர்ந்து பாருங்கள். தமிழில் கலப்பு அறவே கூடாது என்பது எப்படிப் பொருந்தும் என்பதற்கு இன்னும் இதுபோன்ற எண்ணற்ற சான்றுகள் உள்ளன.

தனித்தமிழ், கலப்புத் தமிழ்ப் போரின் முடிவு யாது? கலப்பின்றி உலகில் ஒரு மொழி வளரும் என்பதைச் சிலர் நம்பாமல் இருக்கலாம். பிறர் நம்பாததால் ஓர் உண்மை மறைந்து போகாது. மாளாது. உலகம் தட்டையானது என ஆயிரம் நூல்களில் எழுதி வைத்தாலும், அரற்றித் திரிந்தாலும் உலகம் தட்டையாகிவிடாது.

முடிவாகத் தனித்தமிழைக் கிள்ளக் கிள்ளத் தளிர்க்கும். வெட்ட வெட்ட வளரும். தனித்தமிழைப் போற்றுதார் பேணுதார் தம் இயலாமைக்காக அல்லது அறியாமைக்காக வருந்தும் காலம் வந்து கொண்டிருக்கிறது. இனித்தமிழ் தனித்தமிழே! கலப்பு கழிகிறது. தனித்தமிழ் தழைகிறது. இவ்வியற்கை மலர்ச்சியைத் தடுக்கும் ஆற்றல் இனி எவர்க்கும், எதற்கும் கிடையாது. தமிழில் எழுத முடியாதவர்கள் பேச முடியாதவர்கள் எள்ளட்டும். அறற்கூந்தல் இருப்பவள் அள்ளி முடிப்பதைப் பார்த்து அடுகிழவி தன் நரைக் கூந்தலைக் கோதிக் கொண்டிருக்கட்டும்.

நல்ல எண்ணமில்லாதவர் கலப்படம் செய்வர். தமிழிற்போதிய புலமை இல்லாதவர் பிறசொற்புகுத்துவர். தம் தமிழ்மொழி அறிவின் குறைபாட்டை மறைக்கவே பிற சொற்கலப்பது குற்றமன்று எனக் கூறித்திரிவர். இவர்க்கும், பிறர்க்கும் எல்லோர்க்கும் இன்முகத்தோடும் கூறுகிறேம், முடிவாக இடித்தும் கூறுகிறேம்.

தமிழ் இயல்பாகவே தூய மொழி. அதனுல் அதில் பிற மொழிக் கலப்பை எதிர்க்கிறேம். தமிழ் ஒரு செம்மொழி. அதனுல் அதில் சொற் சிதைவுகளை வெறுக்கிறேம். தமிழ் உயர்தனிச் செம்மொழி. அதனுல் அதனைத் திரிமொழிகளில் ஒன்ருகக் இட்டுக் காட்டுபவர்களை மறுக்கிறேம்.

தமிழ் உலக முதல் தாய்மொழி. இஃது உய்த்துணர்வன்று. உண்மையே என்பதை அறிந்து தெளிவதற்காக, ஆய்ந்து உணர்வதற்காகத் தமிழை முறையாகப் பயில வாருங்கள் எனப் பன்னுட்ட வரையும் அன்புடன் அழைக்கிறேம்.

—(பன்மொழிப்புலவர் இரா. மதிவாணன் அவர்களின் "தமிழ் வளர்ச்சி" என்னும் நூலிலிருந்து தொகுத்தவர் புலவர். பொன். முகிலன்).

செய்திகள்

1. இளங்கண்ணன்-சாரதாமணி வாழ்க.

கடந்த துலை உசு (12-11-78) ஞாயிறு காலை 8-மணியளவில் வாரப்பட்டி (காலஞ்சென்ற) நல்லியார் இளைய மகனும், திருவாளர்கள் ந. சுப்பையனார், தென்மொழி ந. முத்துக்குமரனார் அவர்கள் தம்பியு மாகிய செல்வன் கிருட்டிணசாமி என்னும் **இளங்கண்ணனுக்கும்,** செஞ்சேரி மணியம் நடராசனார் மகள் செல்வி **சாரதாமணிக்கும்,** செஞ்சேரி மணமகள் இல்லத்தில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தலைமையில் திருமணம் நடந்தேறியது. தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பின் தென்மொழி. **ந. முத்துக்குமரனார்** வரவேற்புரையாற்றினார். தென்மொழி **மறை நித்தலின்பனார்** மணமக்கள் உறுதி மொழி படிப்பித்தார். அதன் பின் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** வாழ்த்துச் சிறப்புரை யாற்றினார். பின்னர் பாவலர். **குமர நடவரச ஈவபனார்,** தென்மொழி **மறை நித்தலின்பனார்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. **ந அருள்ஒளி** நன்றியுரை யாற்றினார். இவ்வகைத் தமிழ்த்திருமணம் நடப்பது இவ்வட்டாரத்தில் இதுவே முதல் முறையாகலின், இத்திருமணம் இங்குள்ள மக்களிடத்தில் ஒருவகை விழிப்புணர்வை ஊட்டியது எனலாம். திருமணத்திற்கு அண்டையயல் ஊர்களிலிருந்தெல்லாம் ஏராளமான தென்மொழி அன்பர்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. திருமண நினைவாக மணப்பெண்ணுடைய அண்ணார் **திரு. அருள் ஒளி** தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 25-ஐ அன்பளிப்பாக அளித்தார். மணமக்கள் நீடுழி வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

பிற பொதுச் செய்திகள்

1. ஈரோடு கவின் மருத்துவமனை வாழ்க!

ஈரோட்டில், நெடுநாளைய தென்மொழி அன்பரும் சிறந்த அறுவை மருத்துவருமாகிய **பர். பொ. இளங்கோ. ம. மு.** அவர்கள் பெருந்துறை சாலையில் **கவின் மருத்துவ மனை** என்னும் பெயரில் சிறந்த ஒரு மருத்துவ மனை தொடங்கி நடத்தி வருகின்றார். அம்மருத்துவ மனை முழுவதும் தூய தமிழ் மருத்துவ மனையாக விளங்குவது பெருமைக்குரியது. மருத்துவப் பகுதிகளின் முகப்பு களில் எல்லாம் ஆய்வு அறை, பண்டுவ அறை, அறுவை மருத்துவ அரங்கம், மருத்துவர் அறை, கருவி அறை, எனும்படி தூய தமிழ்ப் பெயர்களும் அடியில் ஆங்கிலப் பெயர்களும் அழகுற எழுதப்பெற்று விளங்குவது சிறப்புக்குரியது. கடந்த திங்கள் ஆசிரியர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்,** அவர்கள் அம்மருத்துவ மனையைப் பார்வை யிடும் பொருட்டு, மருத்துவர் **பர். இளங்கோ** அவர்களின் அழைப்

பிற்கிணங்க, அங்குச் சென்றிருந்தனர். அவருடன் பேரா. **மு. ச. சிவம்**, பாவலர் **குமர நடவரச ஈவப்பனுர்**, தென்மொழி **முத்துக் குமரனுர்** புலவர் **செ. இராசு** ஆகியோர் அங்குச் சென்றிருந் தனர். அம்மருத்துவ மனையுள் விளங்கும் சிறப்பு நிலைகள் பற்றி, ஆசிரியரவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள். **பர். இளங்கோ** அவர் களின் தூய தமிழ்ப் பற்றையும், மருத்துவத் திறனையும் பாராட்டி மகிழ்ந்தார்கள். அதன்பின் மருத்துவர் அவர்களும் அவர்களின் துணைவியார் அவர்களும் ஆசிரியர் அவர்களுக்கும், பிற அன்பர் களுக்கும் தம் இல்லத்தில் இனிய விருந்து ஒன்று அளித்ததுடன், தென்மொழி இதழ் வளர்ச்சிக்கென உருபா ஐம்பது அன்பளிப்பாகவும் தந்து பெருமையுற்றனர். ஈரோடு, கவின் மருத்துவமனையும், பண்டுவர் பர். பொ. இளங்கோ அவர்களும் பல்லாற்றானும் சிறப்புறப் பொதுமக்கட்கு இனிய தொண்டாற்றிப் பெருமையுற, தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

2. 'ஐயை'ப் பாட்டியின் அன்புள்ளம் வாழ்க!

கோவை மாவட்டத்தில் அண்ணூர் என்னும் ஓர் ஊரில் அகவை முதிர்ந்த ஓர் அம்மையார் உள்ளார்கள். அவர்கள் ஆசிரியர் **பெருஞ் சித்திரனுர்** அவர்களின் பாவியமாகிய 'ஐயை'யை மிக விருப்பத் துடன் படிக்கச் சொல்லிப் பல்லாற்றானும் சுவைத்து மகிழ்வுடன் அனைவரிடமும் பாராட்டிக் கொண்டிருக்கும் தகைமையால், அன்பர்கள் அவர்களை **ஐயைப்பாட்டி** என்றே அழைக்கத் தொடங்கி யுள்ளனர். அண்மையில் ஆசிரியர் செஞ்சேரி திருமண நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த பொழுது, ஐயைப் பாட்டி அவர்கள் ஆசிரியர் அவர் களின் சொற்பொழிவைக் கேட்க விருப்பமிருந்தும் வரவியலாமை யால், கான் துறையில் பணியாற்றும் தம் மகனுர் திரு. கோதண்ட இராமசாமி வழி, தென்மொழி வளர்ச்சிக்கென உருபா பத்தைத் தம் அன்பளிப்பாகக் கொடுத்தனுப்பி ஆசிரியர் அவர்களிடம் சேர்ப்பிக்கச் சொல்லியிருந்தார்கள். ஐயைப் பாட்டி அவர்களின் அருள் உள்ளத் தைத் தென்மொழி பல்லாற்றானும் வாழ்த்துகிறது.

3. கோவிந்தராசு—அன்பரசி வாழ்க!

சேலம் வாழைப்பாடி, சின்ன கிருட்டிணபுரத்தில், கடந்த துலை உசு (12-11-78)-இல், செல்வன் **கோவிந்தராசு** அவர்களுக்கும், செல்வி **அன்பரசி** அவர்களுக்கும் நடந்த தமிழ்த் திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு: 5/-வரப் பெற்றோம். மணமக்கள் நீடுழி வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

4. திருக்குறள் பயிற்றுவிப்பு-தொடக்க விழா-நெய்வேலி:

நெய்வேலி உ. த. க. சார்பில், நகரின் 9-ஆம் நகர்க்கூறு நடுநிலைப் பள்ளியில் கடந்த நளி. ௩. (19-11-78) முதல் திருக்குறள்

வகுப்பு நடத்தப் பெறுகிறது. தொடக்க விழாவிற்கு திரு. **வெற்றியரசு. பொறி.** இ. அவர்கள் தலைமை தாங்கினுர்கள். செயலர் திரு. **பெருந்தேவன்** வரவேற்புரையாற்றினுர். திருவாளர்கள் சுந்தரேசன், முத்தமிழன், தென்மொழி திருமாறன், அருள்நெறி, தங்கவேல், கருப்பையா, இராமலிங்கம், புலவர் அருட்குவை திருவாட்டி தமிழரசி ஆகியோர் உரையாற்றினர். பாவாணர் தமிழ்க் குடும்ப மாணவ மாணவியர் குறள் வகுப்புக்கு வந்திருந்தனர். திரு. அருண்மொழி வகுப்பைத் தொடங்கி வைத்தார். புலவர் **அருட்குவை** அவர்கள் தொடர்ந்து வகுப்பை நடத்தி வருவார். இறுதியில் திரு. தனிமகன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

5. புதுச்சேரியா? பாண்டிச்சேரியா?

பாண்டிச்சேரி என்று பெருவழக்காக வழங்கிவரும் அவ்வூரின் பெயர் **புதுச்சேரி** என்பதே என்றும், புதுச்சேரி என்னும் பெயரே 'Poudicherry' என்று பிரஞ்சு மொழியில் எழுதப்பெற்று, 'u' 'n' ஆகத்திரிந்து **பொந்திசேரி** என்று படிக்கப் பெற்றுப் பின் '**பாண்டிச்சேரி**' என்று ஆங்கிலேயரால் வழங்கப் பெற்றது என்றும், பழைய தமிழ்ப் பெயரான **புதுச்சேரி** என்னும் பெயராலேயே அவ்வூரை வழங்க வேண்டும் என்றும், புதுச்சேரி, தமிழ்க் கழகம் புதுச்சேரி அரசுக்கு ஒரு தீர்மானம் அனுப்பிப் பொது மக்களிடை ஒரு துண்டறிக்கையையும் அச்சிட்டுப் பரப்பியுள்ளது, என்று அக்கழகச் செயலர் திரு. இலக்கியன் அறிவித்து உள்ளார்.

6. சேலம், முத்தமிழ்க் கடல் நிகழ்ச்சி:

கடந்த கன்னி உகூ (15-10-78) ஞாயிறன்று, சேலம் கன்னியர் ஓடையில், முத்தமிழ்க் கூடலின் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திரு. **கோ. கனகராசன்** அ.மு (உயிரியல்) தலைமையேற்றுர். கூடலரின் சிறப்பு விருந்தினராகத் தமிழ்த்திரு. புலவர் **இறைக்குருவனுர்** கலந்து கொண்டு சிறப்புரையாற்றினுர், என, முத்தமிழ்க் கடலின் செயலர் திரு. இலக்கு. அருட்செல்வன் தெரிவித்துள்ளார்.

7. தமிழரியா வாழ்க!

கடந்த 1-12-78 அன்று, தஞ்சை மாவட்டம் கங்களாஞ்சேரி, ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர், திரு. **மு. இளமுகிலன்** அவர்கள் துணைவியார் **இள. நிலவரசி முகிலன்** அவர்கள் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார். அக்குழந்தைக்கு ஆசிரியர் **பெருஞ்சித்திரனுர்** அவர்கள் **தமிழரிமா** என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 10 நன்கொடையாக

நூல்: வீரசைவ நெறியும் அதன் வரலாறும்

ஆசிரியர்கள்: வேலா இராசமாணிக்கம், பேரா. மு. சதாசிவம்.

கிடைக்குமிடம்: சிவலிங்க நூற்பதிப்புக் கழகம், 3, மண்டப வீதி, ஈரோடு-638001.

விலை: 75 காசுகள்.

இன்று சிவமதத்தின் ஒரு பிரிவாக விளங்கும் வீரச்சிவனியத்தை அறிமுகப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது, இந்நூல். 'வரலாற்று அறிஞர் சிந்தனை முத்துகள்' என்னுந் தலைப்பின்கீழ்த் தமிழ், தமிழினம், தமிழ்நிலம், தமிழமதம் ஆகியவற்றின் தொன்மையையும் சிறப்பையும் விளக்கும் முறையில் அறிஞர்கள் பற்பலர் கூறிய கருத்துகள் தொகுத் தளிக்கப் பட்டிருக்கின்றன.

வீரச்சிவனியத்தின் தோற்றம் வளர்ச்சிகளும், அதன் சிறப்பும் அவற்றுக்குப் பாடுபட்ட பெருமக்கள் பற்றிய குறிப்பும் சுருக்கமாக வரையப்பட்டுள்ளன. அவையெல்லாம் விரிவான ஆராய்ச்சிக்குரியன வாயினும் வீரச்சிவனியத்தை அறிந்து கொள்ளுதற்கு இஃது ஒரு வாயில் எனலாம்.

- முருகவேள்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

வரப்பெற்றேம். செல்வன் **தமிழரிமா** எல்லா நலன்களும் பெற்று இனிதே வாழ நிறைந்த நெஞ்சுடன் தென்மொழி வாழ்த்துகிறது.

8. அன்பழகன் — கமலா வாழ்க!

தென்மொழியில் நெடுநாள் பணியாற்றியவரும், இப்பொழுதைய தென்மொழியின் அருமைத் தொண்டருமான திரு. **த. அன்பழகன்** அவர்களுக்கும் வேட்டைக்காரன்பட்டி திரு. இராமசாமி அவர்களின் மகள் **கமலா**விற்கும் நளி உசு (10-12-78) ஆம் நாள் திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெற்றது. அதன் நினைவாக மணமகன் தென்மொழிக்கு நன்கொடையாக உருபா பத்து அளித்துள்ளார். மணமக்கள் நீடுழி வாழ்ந்து, தமிழ்ப்பணிக்கு என்றும் துணை நிற்க தென்மொழி வாழ்த்துகிறது

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறுக்கே வந்தவர்களுக்குத் தகுதி கிடையாது; அதை அவர்கள் செய்யவுங் கூடாது. அதுதான் மொழி இயல் அறம். தமிழ்ப் பகைக்கு மேலும் வலுவூட்டி விடும் எழுத்துச் சுருக்கக் கட்டளை. எனவே, தமிழக அரசு அதனை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும். **—சி. நா. செந்தமிழ்ச்செல்வன்**. வேங்கைவாடி.

0:619: என் எண்ணம் கவர்ந்த இன்றமிழ்த் தலைவ! பெரியார் நினைவலைகளை எத்தனையோ நாளிதழ்களும் கிழமையிதழ்களும் திங்களிதழ்களும், எழுப்பினாலும் பெரியாரின் உண்மை உருவை, உலகிலுள்ள மற்றெல்லாப் பேரறிஞர்களோடும் ஒப்பிட்டு விளக்கிய தங்கள் நுண்ணிய கைத்திறன்தான் போற்றற்குரித்து; காய்தல் உவத்தல் இல்லாத கனிச்சாறு; என்னைப் பல நண்பர்கள் வினவினர். 'நீ இறை மறுப்பாளனா? நீ வெறி கொண்டேத்தும் தனித்தமிழ்தனைப் போற்றும் பெருஞ்சித்திரனார் இறைமறுப்பாளரா?' என்று. அன்னாருக்கு நான் இறுத்த விடை 'நாங்கள் இறைமறுப்புக் கொள்கை யுடையவர்கள் அல்லர். ஆனால் 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள், மிகை நாடி மிக்க கொளல்'' என்ற குறளை நன்கு புரிந்த வர்கள். ஐயா, என் விடை சரிதானே!

—அன்பு. **சோ. முத்துமாணிக்கம்** அமரர்பூண்டி பழனி.

0:620: அன்பார்ந்த ஐயா, வணக்கம். தென்மொழி, சுவடி **15**, ஓலை: **5** இதழைக் கண்டேன். தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தத் தினால் ஏற்படும் சொற் குழப்பம், பொருட் குழப்பம், இலக்கணக் குழப்பம் என்னவென்பதைத் தங்கள் இதழில் கண்ணுற்றேன். இதனை உணர்ந்து எழுத்துச் சீர்திருத்தம் செய்பவர்கள் முனைந்து தமிழ் மொழியைக் காக்க வேண்டுகின்றேன். **—தேவிபிரியன்**. திருச்சி.

0:621: அன்புடையீர் ''தென்மொழி'' துலை இதழைப் படித்துப் பெருமகிழ்ச்சியுற்றேன். தமிழ்த்தாய்க்கு அரணாகத் தென்மொழி ஒன்றே உள்ளது. நல்ல ஆசிரியவுரை. அதனைத் தமிழன் ஒவ்வொருவரும் ஊன்றிப் படித்தல் மிகமிக இன்றியமையாதது. துணிவாகவும், அழகாகவும் பொருள்படவும் தெளிவாகவும் அமைந்துள்ளது. இப் பணி தொடர்ந்து அரச கட்டளையினைத் தடுத்து நிறுத்த ஆவன செய்யவும். அரசியல் பகுதியில் **வல்லூறு** கூற்று நூற்றுக்கு நூறு உண்மை. அஞ்சாமைக்கு எவ்வளவு பாராட்டினாலும் தகும். தென் மொழியினைத் தவறாது மாதந்தொறும் வெளியிடவும். இலக்கியப் பசி மிக்க இளைஞர்களுக்கும், தன்மான மறவர்களுக்கும் உறு துணையாக உள்ள இவ்விதழ் காலந்தவறாமல் வருமானால் மிகச்சிறப்பாக இருக்கும். பக்கங்களைக் கூடுதலாக்கி இன்னும் பல பகுதிகளைச் சேர்க்கலாம். அதற்கேற்ப விலையினையும் ஏற்றலாம். **—த. குமார்**. சென்னை-1.

0:622; அன்புள்ள ஆசிரியருக்கு! தென்மொழி நவம்பர்த் திங்கள் இதழில் தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தம்' என்ற

தலைப்பின் கீழ்த் தாங்கள் எழுதிய செய்தி பொன்னெழுத்துகளா வனவாம். என் போன்றோர்க்கு மிக்க மகிழ்வைத் தருவதாகும்!

அறிஞர்கள் பலரும், பல தமிழ் நிறுவனங்களும் வாய்மூடி வாளாவிருக்கும் நிலையில் தங்களின், துணிவான, உண்மையும் நயன்மையும் பொருந்திய அறிவு சான்ற கருத்துகளுக்குத் தலை வணங்குகின்றேன்.

யான் ஒரு கருத்தையும் கூறவிழைகின்றேன். **'ஔ'** என்ற உயிரொலியை மாற்றி **'அவ்'** என்ற உயிரும் மெய்யுமான புதிய ஒலியை உண்டாக்குவதால் வரிவடிவில் மட்டுமன்றி ஒலியிலும் தமிழ் மொழி ஓர் உயிரொலியை இழக்க நேரும் என்பதை ஏன் எழுத்து மாற்ற விரகர்கள் அறியவில்லை? 'ஔ' உதடுகள் குவிவதால் தோன்றும். **'அ'** வாயைத் திறப்பதால் தோன்றும் **'வ்'** மேற்பல் கீழ் உதட்டைத் தொடுவதால் தோன்றுவதாகும். தொல்காப்பியத்தில் சான்றுகள் உண்டே. மொழியின் எழுத்துக்களை மாற்ற வேண்டாம். மாற்றின் வேண்டா விளைவுகள் தோன்றும். தமிழகத் தமிழ்உணர் வுடையோர் பொறுத்துக் கொள்ள மாட்டார். மாற்றம் நிகழின் பெரும் போராட்டம் தோன்றும் என்பதில் ஐயமில்லை. இச்செயலில் தங்களோடு தோளோடு தோள் நின்று தங்கள் வழி காட்டுதலின் வழி நடக்க என்றும் ஆயத்தமாயுள்ளோம் எனக் கூறி முடிக்கின் றேன். வணக்கம். **—சு. கிருட்டினமூர்த்தி,** க. மு; கீ.க.தே. ஆ.ப. செயலர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம், மயிலாடுதுறை.

0:623 அன்புள்ள ஐயா, வணக்கம். தென்மொழி சுவடி **15** ஓலை **5** இன் "தமிழக அரசின் மொழிச் சீர் திருத்தம்" ஆசிரியவுரை படித்தேன். பொருத்தமான நேரத்தில் பொருத்தமாக எழுதினீர்கள். **ணை, னை, ளை, லை** போன்ற உயிர்மெய்யெழுத்துகளில் உள்ள **'ஐ'** காரக் குறியீடான **'ை'** தொடக்கக் காலத்திலிருந்து உயிர்மெய் யெழுத்துகளில் இடது மேற்புறத்தில் இணைத்தே எழுதப்பட்டு வந்தது. கால வளர்ச்சியில் அவை சுழித்து வளர்ந்த பொழுது, சுழித்து எழுதும் எழுத்துகளான **ண, ன, ல, ள** என்ற எழுத்துகளோடு அவ்வாறே எழுதின் ஏற்படும் குழப்பம் நீங்கவும், எழுத்துக்களின் அமைப்புக் கேற்பவும் **ணை, னை, லை, ளை** என எழுதப்பட்டன. மற்ற எழுத்து களில், குறிப்பிட்ட கால வளர்ச்சிக்குப்பின் **'ஐ'** காரக் குறியீடான **'ை'** பிரிந்தபொழுதும் **ல. ள, ன, ண**விலுள்ள 'ை' காரக் குறியீடு பிரியாது நிலைத்து விட்டது. இதுவரை கிடைத்த கல்வெட்டுக்கள் செப்பேடுகள் அனைத்திலும் இவ்வாறே உள்ளன. ஆனால் கி.பி.886 இல் வெளியிட்ட ஆய்குல மன்னன் கருநந்தடக்கணின் பார்த்தி வேந்திரபுரச் செப்பேட்டில் மட்டும் **லை, ளை, ணை, னை** என நெறிவிலக்காக எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மெய்யெழுத்துக்களில் வரும் 'ஆ'காரக் குறியீடான **கால்[ா]** தாங்கள் குறிப்பிட்டது போல் வீரமாமுனிவரால் செய்யப்

பட்ட சீர்திருத்தமன்று. அவர் தமிழகம் வருவதற்குப் பன்னூருண்டு கட்கு முன்பே இருந்து வந்துள்ளமைக்கு ஆயிரக்கணக்கான கல் வெட்டுகள் சான்று பகர்கின்றன. அதேபோன்று 'ஏகார' ஓகாரக் குறியீடான இருச்சுழிக் கொம்பும் (ே) அவர்காலத்திற்கு முன்பே வழக்கில் வந்துவிட்டது. அவர் சீர்திருத்தியதாகக் கருதி வரும் கருத்து பிழையுடையது.

—**"கொங்கன்"** தமிழ்ச்சோலை, சென்னை 96.

0:624 நாளும் நல்லதமிழ்ப் பயிர் வளர்க்குஞ் சொல்லேருழவ, பணிவார்ந்த வணக்கம். பெரியார் நூற்றுண்டுச் சிறப்பிதழ் பெற்றேன். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய பெரியார் நூற்றுண்டு நினைவுகளையொட்டித் தாங்கள் எழுதியிருந்த ஆசிரியவுரை தமிழின முன்னேற்றத் தடைக்கற்களைத் தகர்த்தெறிய வல்லன; 'நன்றுற்றலுள்ளுந் தவறுண்டு' எனுந் தமிழ்மறைக்கியையப் பெரியார் தமது பிற்கால வாழ்வில் மொழித்துறையிலுந் தலையிட்டு, எழுத்துகளைத்திருத்திய பொருத்தமில்லாச் செயல், அன்னாரது அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட, வரம்புமீறிய செயலென்பது எளியேனது கருத்து.

நீண்ட வரலாறும், இலக்கிய இலக்கணச் செழுமையுஞ் செம்மையும் வாய்ந்த உயர்தனிச் செம்மொழியின் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி, வேறொரு குறிப்பிட்ட பணிக்காகக் கூடிய பெரியார் நூற்றுண்டு விழாக்குழு முடிவு செய்வதும், அதனை ஆய்ந்தோய்ந்து பாராது உடனே ஏற்று ஒரு சிறு அறிவிப்பின் வாயிலாக அரசு ஆணையிடுவதும் முறையா? மொழிக்குத் தகுமா? மொழித்துறையில் தலையிட்டுச் சீர்திருத்த வேண்டிய காலக்கட்டாயம் நேரிட்டாலும்,- அந்தத் துறையில் நுண்ணிய நூல்பல கற்றுவல்ல- மொழிமாமலை பாவாணரையொத்த முற்றறிவாளரே- செய்தல் வேண்டும்.

எழுத்துச் சீர்திருத்தத்தால் தமிழ், எளிமையாகி எளிதில் பரவி, ஓங்கிஉலகளக்கும் என்று அரசு கருதுமானல், அஃது-ஓர் ஊமன் காணும் மாயக் கனவே. ஐயுறவின்று. ஒவ்வோர் அரசியற் கட்சியும் தேர்தற்காலத்துப் பதவியாசை மிக்கு, எவ்வாறேனும் அரியணையேற வேண்டுமென்னும் பேராசையால், 'தமிழ் எழுத்துக்களை இப்படித் திருத்துவோம்; இன்னின்ன சொற்களை இன்னின்னவாறு பொருத்துவோம்; மேலுஞ் சீர்திருத்துவோம்' என்றெல்லாம் மேடைதோறும் முழங்காதா? தென்றமிழ் தெருச்சரக்காக்கப்பட்டுச் சீரழியுமே? உலக அறிவு அத்தனையும் மொத்தமாகப் பெற்றுள்ள(!)நமதருமை அரசியலாளர்கள் 'சீர்திருத்தத் தமில் வால்க' என ஆர்வமுடன் (!) குரலெழுப்பி ஆர்ப்பரிப்பார்களே! என்னே எதிர்காலஞாலத்தின் புதிர்க் கோலம்! நினைக்கவே நெஞ்சம் நடுக்குறுகின்றது.

ஆகலின், நிறைதமிழ்ப் புலமைச் செல்வராகிய தாங்கள், எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய-அரச கட்டளையைத் திரும்பப்பெறச்

செய்ய, இன்னே-முன்வந்து இடித்துரைத்தல் வேண்டும். எழுத்துக்கள் நடைமுறைக்கு வராதவாறு தடுத்தல் வேண்டும். இச்சீர்திருத்தம் ஏதோ அரசுப்பணிகளுக்கு மட்டுமே என்றெண்ணி வாளாவிருப்ப தறியாமை. அரசுப் பொறுப்பிலுள்ள அனைத்துப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகப்பாடநூல்களில் சீர்திருத்தம் என்ற போர்வையில் — சீர்கேடுகள் அச்சேறும்; இளந்தலைமுறையினர் திருத்திய தமிழ் எழுத்துகளைக் கற்க நேரிடும். தமிழ்நாட்டில் திருத்திய தமிழும் பிற இடங்களில் நிலைமாருத் தமிழும் வழங்கி-உலகத்தமிழ் குழப்பநிலை எய்தும்; தாங்கள் அமைதி காக்காது, நமதருமைச் செந்தமிழ், முந்தியிங்கில்லா முழுச்சிறப்புடன் வளர்ந்து பரவும் பொருட்டுச் சீர்திருத்தத்தை எதிர்த்து, அரச கட்டளையை உலைவு செய்விக்கத்தக்க ஆசிரியவுரை எழுதுங்கள். தமிழின் நலங்கெடுங்காலெல்லாந் தலையிட்டு வளஞ்சேர்க்கவல்ல தாங்களே அரசுக்கு ஆய்வுரை வழங்கக்கூடிய அஞ்சாமை மிக்கவர்; இடித்துரைத்துத் திருத்தக் கூடிய திறனுடையவர். கொடிய நெருக்கடி நிலையிலும் நிலைகுலையா நெஞ்சுரத்தோடு கொஞ்சு தமிழ்க் காத்தவர்; அடுத்துவருந் தலை முறைக்கு அருந்தமிழ்ச் செல்வங்கள் சேர்ப்பவர்.

'தமிழ், தமிழ்' என வாய்கிழிய முழங்கும் பிறரெல்லாந் தந்நலம் பேணவே தமிழ்நலம் பேசுபவராக இருத்தலால், தமிழ், இனம், நாடு ஆகிய முப்படிநிலை முன்னேற்றத்தில் முழுமையாக வாழ்க்கையையே ஈடுபடுத்திக் கொண்டுள்ள தாங்கள் இனம், நாடு-ஆகிய இரண்டிற்கும் அடிப்படையான மொழிச்சீர்திருத்தத்திற்கு எதிர்ப்புங் கண்டனமுந் தெரிவித்தல் வேண்டும். உலகத்தமிழர் தம் தோல்வியறியாப் படைக்கலந் தென்மொழிவழியே அரசுக்கும், அனைவர்க்கும் அறிவு தெருட்டுங்கள்; தூய தமிழ் நெறிப் படுத்துங்கள்.

—**பெரு. தமிழ்வேந்தன்**, பவானிசாகர்.

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணக் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் கேட்க!

0:614: அய்யா, வணக்கம். தென்மொழி சுவடி **15**, ஓலை **5**-இன் ஆசிரியவுரையைப் படித்தேன். 'நடிகர்' என்னும் 'அலைஓசை' 'முரசொலி' இதழ்ச்சாயல், தங்களை அரசியல் கட்சியின் கடைநிலை எழுத்தாளராகவே காட்டுகிறது! அறிஞராகக் காட்டவில்லை!! 'அவ்வத்துறை அறிஞர்கள்' பட்டியலில் தாங்களும் ஒருவரோ? இக்கட்டுரையைப் படித்ததும் தாங்கள் அறிஞரா? .... அரசியல் கட்சி எழுத்தாளரா?...என்ற ஐயமே எழுகிறது! புலவர் குழுவும் மற்றும் பல அறிஞர்களும் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை வரவேற்கிற நிலையைத் தாங்கள் அறியவில்லையோ?! பெரியாரின் வெங்காய வாடையும் வீசுகிறதே தங்களிடம்!? தங்களுக்கு மட்டும் 'அறிவும்' 'பகுத்தறிவும்' எப்படி 'பொதுக்'கென்று பொத்துக் கொண்டு குதித்து வந்தது'(?!) என்று புரியவில்லை! ஈராயிரம் படிகள் 'தென்மொழி' இதழ் விலை போகும் போதே தாங்கள்தான் தமிழ்நாட்டு விடுதலைத் தலைவர், தனித்தமிழின் அறிஞர் என்று அதிகாரம் கொண்டவராகக் காட்டிக் கொள்ளும்போது, இரண்டு கோடிக்கு மேற்பட்ட மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவனுக்கு அதிகாரம் இருப்பதில் வியப்பொன்றுமில்லையே! அறிஞர் பலர் இவ்வெழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஆக்க முழுமையான அறிவுரைகளை 'இந்து' போன்ற நாளிதழ்கள் வழியாகவும், அரசுக்கு நேரிலும் அளிக்கின்றனர். மாறாகத் தங்கள் ஆசிரியவுரையின் நோக்கம் அரசைப் பழிப்பது தான்.. ! அதனை அறிவுரையென எவரும் கொள்ளார்!! இவ்வாசிரிய வுரை தங்களை யாரென்று தெளிவு படுத்துகிறது!

—**மணி**. புதுதில்லி-3.

0:615: ஆசிரியர்க்கு! வணக்கம். தென்மொழி சு **15**-ஓ **5**-இல் தீட்டப்பட்டுள்ள கட்டுரைகளைப் படித்த பின்பு தானே உங்களுடைய உண்மையான தோற்றமும் முழுமையாகத் தெரியவருகிறது. தமிழ்-தமிழன்-தமிழ்நாடு என்று திண்ணைத் தூங்கிச் சிந்தனையாளர்கள் எல்லாம் போர்க்களத் தழும்புகள் பல ஏற்ற கலைஞரை நடுநிலையாளர் என்ற போர்வையில் வசைமாரி பொழியச் செய்து மிகவும் சிறப்பாக வெளிவிட்டு மகிழ்ந்துள்ளீர்கள், மிக்க நன்றி! இன்றைய ஆட்சி யாளர்கள் எப்படி என்பதைக் கண்டிக்கும் உள்ள உறுதி இல்லாத வர்கள் கலைஞர்மீது பாய்வதுதான் வீரமா? பாவம் பரிமளா மணாளர் கண்களை மூடிக்கொண்டால் உலகமே இருண்டுவிடும் என்று நம்பு கிறார் போலும்! இன்றைய சூழ்நிலையில் அரசியல் கலப்பில்லாத வாழ்க்கை வாழ்வது என்பது முடியாத செயலாகும்! உணவு உடை இருப்பிடம் யாவற்றிலும் ஊசிமுனையளவாவது அரசியல் புகுந்து விடும் காலம்! அதுவும் இப்போதைய அரசியல் வானில் "தூய்மை" என்ற வாய்ப்பறை அரசியல் செல்லுபடியாகாது. முடிவாக எப்படி யாவது தமிழ் உணர்வு, தமிழர் நலம் காப்பாற்றப்பட வேண்டும். அதற்காகத்தான் கலியாணசுந்தரத்துடன் மடியில் கற்களைக் கட்டிக் கொண்டு சவலைத் தன்மையோடு அலைகிறார் என்றும், தன்னம்பிக்கை, தன்மதிப்பு, தன்னறிவு போன்றவற்றை இழந்து தடுமாறுவதைப் போலப் பூளைமேடு, வல்லூறு போன்ற அறிவுக் கொழுந்துகள் கொச்சையாக அவதூறு கூறுவதை நாங்கள் பெரிதாக மதிக்க வில்லை. இன்றைய அரசியல்வானில் மிகவும் வேண்டப்படுவது அறிவார்ந்த அணுகு முறைகளே தவிரப் போலித்தனமான அறி வுரைகள் அல்ல.

—**கூத்தைப்பார் ஆ பொன்வள்ளவன்** திருச்சி-13.

0:616: ஐயா, வணக்கம். இத்திங்கள் தென்மொழி இதழ் கண்டேன், அதிர்ச்சியுற்றேன். யார் இந்தச் செய்வர்த்தனா எனும் தலைப்பில் பூளைமேடு பரிமளாமணாளன் என்பார் தீட்டிய மடலின் இறுதியில், உலகத் தமிழ்க்காவலரும், அவரது உடன் பிறப்புகளும், செயவர்த்தனா வருகையினைப்பற்றி வாய்திறக்கவில்லையே, என வினா தொடுத்துள்ளார். ஈழத்துத் தமிழர்களுக்கு இன்னல் என்றதும், ஐந்து இலக்கம் தமிழர் படையை, அணிவகுக்க வைத்து, ஈழத் தமிழர்களின் இடர்ப்பாடுகளைக் களைந்தெறிந்தத் தலைவரை, ஏழரைக் கோடி தமிழர்களின் இதயத் துடிப்பாம் தமிழ் இனத்தலைவர் கலைஞர் அவர்களை, இழிவுபடுத்தும் நோக்குடன் தாக்குதல் நடத்தியுள்ளார். செயவர்த்தனாவின் கொடுங் கோன்மையினைப் பற்றி பரிமளாமணாளனிடம் பாடம் கேட்கும் நிலையில் கலைஞர் அவர்களின் தொண்டர்கள் இல்லை என்பதனை அவர் அறிதல் நன்று என்று தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ் ஈழ விடுதலைக்கு, தமிழக விடுதலைக்கு, வழக்காடவும், போராடவும் நான் அணியம். பரிமளாமணாளன்கள் அணியமா?

—**தமிழ்மன்னன்**. சென்னை.

0:617: தமிழ் நெஞ்சத்தீர், வணக்கம்; வாழி. இத்திங்கள் தென்மொழி ஆசிரியவுரையில் எழுத்துச் சீர்திருத்தம் ஏசப்பட்டதைக் கண்டு, எட்டாண்டாக அக்கொள்கையை மொழியாய்வு அடிப்படையில் ஏற்றுக் கொண்டவர்கள் என்னும் முறையில் சில கூற கடமைப் பட்டுள்ளோம். தனித்தமிழ் அமைப்பினர் வேறு கவர்ச்சிகளுக்காக அன்றித் தனித்தமிழ் இலக்கணத் தலைவர் என்பதற்காகப் பாவாணர்க்கும், தனித்தமிழ் இலக்கியத் தலைவர் என்பதற்காகப் பாவலர் ஏற்றிற்கும் பின்பற்றுளராய் உள்ளனர் என்னும் மெய்ம்மை பற்றியே இக்கட்டுரை விளக்கத்தை விடுத்துள்ளேன். பாவாணர் 'எழுத்துச் சீர்திருத்தம் வேண்டா' என்று என் 'தமிழ் நூல்' அணிந்துரையிலும், நேரிலும் சுட்டியபோது, நான் என் மொழி முன்னோடி என்னும் முறையில் கரணியம் கேட்டேன். 'கையெழுத்து வாகிற்காகவே' இவ்வாறு திரிந்தது என்று மட்டுமே உரைத்தார். ஆங்கிலத்தில் அச்செழுத்து, கையெழுத்து என்று இரண்டு கூறு இருப்பது போல் தமிழில் மேற்கொள்ளலாமே. உயிர்மெய் எழுத்தை இரண்டாய் உடைக்கும் கொண்டல். சு. ம. வின் ஆய்வைப் பாவலர் புறக்கணிப்பதில் எமக்கு இருகருத்தில்லை. ஆயின் ஒட்டு மொத்தமாக எழுத்துச் சீர்திருத்தத்தை எதிர்த்துக் குரலெழுப்பித் தனித்தமிழ் அமைப்பை எதிரானதாகக் காட்டவேண்டா.

—**த. ச. தமிழன்**. உ. த. க. அமைப்பாளர். தஞ்சை.
இயற்றமிழ்ப் பயிற்றக அமைப்பாளர். திருவாரூர்.

0:618: பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம். தமிழகம் மேலும் மேலும் கீழான நிலைக்கே போய்க் கொண்டுள்ளது. செந்தமிழின் செம்மையைப் போற்றிக் காக்க வேண்டிய வேளையில் எழுத்துச் சுருக்கம் செய்யும் வேலையில் அரசு ஈடுபடுவது முற்றிலும் அறிவு நிலைக்குப் பொருந்தாததே. சிக்கல்களை மேலும் வளர்க்க அது வழிவகுத்துவிடும். ஒரு மொழியின் எழுத்துகளைக் குறைக்க

(தொடர்ச்சி 45-ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).